"ஈசன் நெறி பரப்ப இன்தமிழ் வளர்ப்போம்"

# கலசம்
# KALASAM

தை-மாசி-பங்குனி
1994



அன்பளிப்பு
50பென்ஸ்

லண்டனிலிருந்து வெளிவரும் முதல் ஆத்மீகக் காலாண்டிதழ்

உ

# தென்னவன் சிவனின்
# திருவருட்டிறன் சொல்லும்
# தெய்வீக எழுத்துக்கள்
# எத்தனையோ அத்தனைக்கும்
# எங்களது ஆத்மீக வணக்கங்கள்

ஆசிரியர் குழுவும் வாசகர்களும்


ஆசிரியர்

மு.நற்குணதயாளன்

துணை ஆசிரியர்

க. ஜெகதீஸ்வரன்

நிர்வாகத் தொடர்பு

வ.இ. இராமநாதன்

பொருளாதாரத் தொடர்பு

சிவ. அசோகன்

பொதுமக்கள் தொடர்பு

மாணிக்கம் சுரேஷ்

விற்பனை விநியோகத் தொடர்பு

இ.முருகதாசன்

மகளிர் பகுதித் தொடர்பு

திருமதி உமா ஜெயக்குமார்

வெளியீடு

சைவ முன்னேற்றச் சங்கம்

அச்சமைப்பும் வடிவமைப்பும்

சைவ முன்னேற்றச் சங்க பதிப்பகம்

அச்சுப்பதிவு

செல்வம் அச்சகம்



தொடர்பு முகவரி

**KALASAM**

**3, GAYFERE ROAD, CLAYHALL**

**ILFORD, ESSEX**

**IG5 0JG**

**ENGLAND**

**TEL: 081 551 4292**




# உள்ளே......


ஆசிரியர் பேனாவிலிருந்து..................1

வாரியார் பாரிவள்ளல்..........................2

துன்பங்கள் தீர்க்கும்..........................3

ஔவை தந்த குறள்..........................6

நித்திய கன்னி....................................9

எம்மையாளும்....................................12

துய்ப்போம் எனினே..........................13

இந்து சமயம்......................................15

நல்லை நகர்........................................18

அதிதீரன்............................................21

சைவ நூல்கள்......................................25

திருப்புராணம்.....................................27

எழுத்துலகில்......................................29

DIVINE NECTAR..............................32




அன்பு நிறைந்த எம் இனிய
வாசகர்களுக்கு
இதயம் நிறைந்த
பொங்கல் வாழ்த்துக்கள்
மேற்கு லண்டன் பகுதியில் எழுந்தருளி
அருள் பாலித்துக் கொண்டிருக்கும்
ஸ்ரீ கனகதுர்க்கை அம்மன்
வண்ணமாக அட்டையில்
காட்சி தருகிறாள்.
இதற்கு உதவி புரிந்த பெயர்
குறிப்பிட விரும்பாத நண்பருக்கு
எமது நன்றிகள்.

வணக்கம்

புதிய வருடத்தின் நுழைவாயிலில் உஙகளோடு சில
வார்த்தைகள் உரையாடலாமென்று நினைக்கிறேன்.
நான்கு கலசங்களை வெற்றிகரமாக வெளியிட்டுவிட்ட
தைரியத்தில் ஐந்தாவது கலசத்தில் உங்களோடு
மனம்விட்டுக் கதைப்பதில் மனசு உவகைகொள்கிறது.
ஏனென்றால் எங்களின் வெற்றிக்கு நீங்கள் தானே
காரணகர்த்தாக்கள்.நாம் பிறந்த மண்ணில்
நாம் வணங்கிய ஆலயங்கள் எல்லாம் நம்
காலத்திலேயே மண்மேடுகளாகின்ற
துயர சம்பவங்கள் எம் செவிகளை வந்தடையும்போது
மனசு தானே அழுகின்றது.எம்மோடு பிறந்தவர்கள்
உண்ண உணவின்றி உடுக்க உடையின்றி உறங்க நிழலின்றிக்
கதறி அழுகின்ற துயர ஓலம் தேவாரங்களாகச்
செவி வழிநுழைந்து மனசுள் புகுந்து மத்தளம்
வாசிக்கும்போது
உடல் சூடாகிப்பின் குளிர்ந்து சமாதிநிலைக்குப்போக
சங்கரனின் பாதாரவிந்தங்களைப் பற்றிப் பிடித்தபடி
கூடப்பிறந்தவர்களின் ஆத்ம ஈடேற்றத்திற்காக
பிரார்த்திப்பதைத்தவிர வேறு நாம் என்னதான் செய்ய முடியும்?
நீங்களும் எங்களோடு சேர்ந்து எங்களவர்களுக்காகப்
பிரார்த்தனை செய்யுங்களேன்.
கலசம்
இந்துக்களின் சொத்து.ஒவ்வொரு கலசமும்
ஒவ்வொரு இந்துவின் ஆத்மீக ஆபரணம்.
இந்த ஆபரணத்தை அணிவது உங்கள்
கடமை. இதுவரை நீங்கள் உதவியது
போல் தொடாந்தும் உதவவேண்டுமென்று
இறையருளால் வேண்டி முடிக்கிறேன்.
வரட்டுமா ?
அன்புடன்
ஆசிரியர்




# வாரியார் பாரிவள்ளல்

(திருமுருக கிருபானந்த வாரியாரின் அமரத்துவம் பற்றிய நினைவஞ்சலிப் பாடல்)



வாரியார் என்னும் பேரை
வாயாரச் சொல்லும் பேரை
நேரிலாத் துயரில் ஆழ்த்தும்
நிலையிது நேர்ந்த தேனோ

பாரிபோல் வள்ள லாகிப்
பைந்தமிழ் அமுத ஞானம்
மாரிபோல் அள்ளி அள்ளி
வழங்கிடும் மானி எங்கே

சிவனடி தொழுவ தாலே
சித்தியுண் டாகும் மார்க்கம்
திடமெனச் சொல்லிச் சொல்லித்
தேற்றிடும் சீலர் எங்கே

திருமுரு காற்றுப் படையின்
சீரிய பொருளும் பயனும்
அருமுரைப் பணியி னாலே
ஆற்றிடும் ஆசான் எங்கே?

முக்கனிச் சுவை இனிக்கும்
முருகனின் திருப்புகழ்ப் பா
பக்குவப் பண்ணால் எங்கும்
பாடிடும் ஞானி எங்கே?

ஆறுபடை வீடு கண்டால்
ஆறுமுகன் கருணை உண்டாம்
மறுமையும் இனிதாம் என்றே
வழிசொலும் முனிவர் எங்கே!

சிவநெறி போற்றும் அன்பர்
சிந்தையிற் குருவாய் நின்று
தவநிலை உபதே சங்கள்
சாற்றிடும் தவசி எங்கே?

ஆலயம் பணிக ளெங்கும்
அனுதினம் வளரத் தமது
சாலநற் பொருளும் நிதியும்
தந்திடும் பாரி எங்கே!

சரவணன் அடியைத் தஞ்சம்
தஞ்சமென் றெண்ணி யெண்ணித்
தருணமென் துறவே சொர்க்கம்
தழுவியே கினரோ தானோ!

அமரராய் ஆனபோதும்
அண்ணலாம் வாரியார் நம்
கமழுசீர் உள்ளமெல்லாம்
காட்சிகள் தோற்றினாரே!




கவிஞர் ஞானமணியம்



# துன்பங்கள் தீர்க்கும் துர்க்கை அம்மன்

இங்கிலாந்து நாட்டிலுள்ள இந்து மத ஆலயங்கள் என்ற வரிசையில் தெற்கிலே அமர்ந்து விக்கினங்கள் தீர்க்கும் விம்பிள்டன் விநாயகன். வடக்கில் உயர் வாசற்குன்றிலிருக்கும் கலியுகக்கடவுள் கந்தப்பெருமான். கதிரவன் உதிக்கும் கிழக்கில் வள்ளி தெய்வயானை சமேதரராய் அமர்ந்து அருள் புரியும் இலண்டன் ஸ்ரீ முருகன் அஷ்ட சித்திகளையும் அள்ளித்தரும் இலஷ்மி.



இலஷ்மி நாராயணராக சேர்ந்து அமர்ந்து இருக்கும் இலஷ்மி நாராயணர் ஆலயம் போன்ற ஆலயங்களின் தோற்றம் பற்றி இது வரை பார்த்தோம். தொடர்ந்து தமிழ் தந்த பாண்டி நாட்டை மீனாட்சி என்ற பெயரில் ஆட்சி செய்து, இன்று உலகில் வாழும் மக்களின் பாவங்களை பொறுத்து அருள் புரியும் உலக அன்னையின் வடிவமாம் துர்க்கை அம்மன் கனக துர்க்கையாய் தாய்நாட்டை பிரிந்து வாழும் எம்மைக்காக்க இலண்டன் மாநகரின் மேற்குப்பகுதியில் எழுந்தருளி வந்துள்ளாள். இவ்வாலயத்தின் இதுவரையான வளர்ச்சி பற்றி சற்றுப்பார்ப்போம்.

இந்த ஆலயம் சம்பந்தமாக சில விவரங்களை சேகரிக்க முற்பட்ட போது... இவ்வாலயம், தர்மகர்த்தா சபைத்தலைவர் திரு பொ. தெய்வேந்திரம் அவர்களின் எண்ணத்தில் தோன்றிய ஒரு செயல்த்திட்டம் என்று அறிந்து அவர்களை சந்தித்து பேட்டி கண்ட போது கிடைத்த மேலதிக விபரங்களை சுருக்கமாக இங்கு தருகின்றேன். இவ்வாலயம் இப்பகுதியில் அமைக்கப்படவேண்டிய தேவை, தற்காலிகமாக பூசை நடைபெறும் இடம் பற்றிய விவரங்கள் மூலமூர்த்தியாக கனகதுர்க்கை அம்மன் தேர்ந்தெடுக்கப்பட்ட காரணம் என்பன பற்றி கேட்ட போது பின்வருமாறு பதிலளித்தார். இவ்வாலயம் பற்றிய எண்ணக்கரு சுமார் 4 வருடங்களுக்கு முன் தனது மனதில் தோன்றியதாகவும் ஆனாலும் கூட சுமார் 2 வருடங்களுக்கு முன்னதாகவே இப்பணியைப்பற்றி பகிரங்கமாக தன்னுடைய நண்பர்களுடன் கதைத்ததாகவும் கூறினார். ஒன்று பட்டால் உண்டு வாழ்வு என்ற வாக்கிற்கிணங்க கால்கோல் விழா 1991ஆம் ஆண்டு ஆவணி மாதம் 10ஆம் திகதி தமிழ்நாட்டிலுள்ள காளிகாம்பாள் ஆலயத்தின் பிரதம குருக்கள் சிவஸ்ரீ சாம்பசிவ சிவாச்சாரியாரின் ஆசியுடனும் பூசையுடனும் அம்மன், பிள்ளையார், முருகன், ஆகிய இறைவடிவங்களின் திருவுருவப்படங்களை வைத்து குங்குமம் தாங்கிய திருவிளக்குகளின் மத்தியில் இனிது நிறைவேறியது. இந்நிகழ்ச்சியில் மற்றைய ஆலயப்பிரமுகர்களும் கலந்துகொண்டு சிறப்பித்தார்கள். இவ்வாலயத்தின் அவசியம் பற்றிக் கேட்டபோது இந்நாட்டில் சகல பாகங்களிலும் தமிழர்கள் வாழ்கின்றார்கள் என்றும் இருந்தும் இவ்வாலயம் அமைக்கப்பட்ட பகுதியிலும் அதன் அருகிலும் தான் பெருமளவு சைவத்தமிழர்கள் வாழ்கின்றார்கள். எனவே

கண்டுகேட்டவர்
**மாணிக்கம் சுரேஷ்**

இவ்வாலயம் இப்பகுதியில் அமைக்கப்பட்டு , மக்கள் எவ்வித போக்குவரத்து கஷ்டங்களுமின்றி சுலபமாக வந்து போகக்கூடியதாகவும் உள்ளது. அத்துடன்

உன்னை உனக்குரிய இடத்தில் கடவுள் வைத்துள்ளார்

கனகதுர்க்கை அம்மன் ஆலயம் ஒன்று இதுவரை இந்நாட்டில் அமைக்கப்படவில்லை. எனவே கருத்தில் கொண்ட அம்மன் பக்தர்களுக்காக இவ்வாலயத்தை தோற்றுவிக்கமுற்பட்டோம். எனது அடுத்த கேள்வியாக இங்கிலாந்து நாட்டில் வந்தேறு குடிகளாக இருக்கும் நாங்கள் போட்டிக்கு அமைப்பது போல் ஆலயங்களை அமைத்து வருகின்றோம். எதிர்காலத்தில் இவை எமது சந்ததியினரால் பரிபாலிக்காமல் விடப்படும் பட்சத்தில் இவ்வாலயங்கள் கவனிப்பாரற்று அழிந்து போகும் சாத்தியம் ஏற்படும் அல்லவா? இதைப்பற்றிய தங்களுடைய கருத்து என்ன என்று கேட்டேன். இதற்குப்பதிலளித்த அவர் காலத்தின் தேவைக்கேற்ப இவ்வாலயம் அமைக்கப்படுவதை விளக்கி எதிர்காலத்தில் இளைய தலைமுறையினர் இவ்வாலய காரியங்களில் ஈடுபடுவார்கள் என்பதில் தனக்கு முழுநம்பிக்கையிருப்பதாகவும் குறிப்பிட்ட அவர் தற் சமயத்தில் ஆலயங்களில் நடைபெறும் காரியங்களில் அவர்களை ஈடுபடுத்தி வருவதாகவும் தெரிவித்தார். தற்போது பூசை நடைபெறும் செவ்வாய் வெள் ளிக்கிழமைகளில் அங்கு வரும் சிறார்கள் பெரியவர்களுடன் சேர்ந்து பஜனை செய்வதாகவும் குறிப்பிட்டார். இவ்வாலயம் எவ்வித போட்டி நோக்கத்தோடும் தொடக்கப்பட்டதல்ல. இவ்வாலயம் மக்களின் வழிபாட்டுத்தேவை ஒன்றை மட்டும் மனதில் வைத்து ஆரம்பிக்கப்பட்டது என்று அழுத்தம் திருத்தமாக குறிப்பிட்டார். இவ்வாலய தர்மகர்த்தா சபையிலுள்ளவர்கள் அனைவரும் இலண்டனிலுள்ள ஏனைய ஆலயங்கள் அனைத்துடனும் சுமூகமாக ஒரு நல்ல உறவை கொண்டுள்ளார்கள் என்பதற்கு ஆலயத்தின் கால்கோள் விழாவில் எல்லா ஆலய உறுப்பினர்களும் கலந்துகொண்டமை ஒரு எடுத்துக்காட்டாகும். அடுத் ததாக கடந்த 2 வருடங்களில் ஆலய வளர்ச்சி பற்றி நான் கேட்டபோது சுமார் பத்து வருடத்திற்கு முன்னால் லண்டனில் அமைக்கப்பட்ட முதல் ஆலயமாம் விம்பிள்டன் விநாயகர் ஆலயத்தின் தர்மகர்த்தா "சிவநெறிச் செல்வர்" திரு இரத்தினசிங்கம் அவர்கள் தர்மகர்த்தா சபையின் வேண்டுகோளுக்கு இணங்க அவர்கள் இவ்வாலயத்தின் துர்க்கையம்மன் சிலையை இந்தியாவில் இருந்து எடுப்பித்து வழங்கியுள்ளார். தற்காலிகமாக செவ்வா ய்க்கிழமைகளில் மாலை எட்டு மணியிலிருந்து பத்து மணிவரை New Hall, Union Road Wembley என்ற இடத்திலும் வெள்ளிக்கிழமைகளிலும் Shackleton Hall, Shackleton Road South Hall மாலை ஏழு மணி தொடக்கம் பத்து மணிவரையும் பூசை அபிஷேகங்கள் நடைபெறுகின்றது என்றும் குறிப்பிட்டார். ஆலயத்தின் நிரந்தரக் கட்டிடத்திற்காக தற்போது தர்மகர்த்தாக் குழுவினரும் நிர்வாகக் குழுவினரும் உத்வேகத்துடன் நிதி சேகரித்து வருவதாகவும் குறிப்பிட்டார். பொதுமக்கள் பங்களிப்புத் திட்டமொன்றை உருவாக்கி ஆயிரம் அலகுகளாக இக்கட்டிடத்திட்டத்தைப் பிரித்து ஒவ்வொரு அலகும் 500 பவுணாக நியமிக்கப்பட்டுள்ளது. இவ்வலகு ஒன்றை வாங்குவதன் மூலம் ஆலயக்கட்டிட நிதிக்கு உதவுவதோடு வாங்குபவர் ஆலய அறக்கட்டளையின் ஆயுட்கால உறுப்பினராகவும் ஆகலாம் என்றும் கூறினார். அதோடு சாதாரணமான உறுப்பினராக சேர விரும்புவோர் மாதாமாதம் மூன்று பவுண் கொடுத்து அங்கத்தவராக ஆகலாம் என்றும் கூறினார்.

ஆலயத்திற்கான கட்டிடத்தைத் தேடிக் கொண்டிருப்பதா கவும் விரைவில் கட்டிடம் கிடைத்து அறப்பணி ஆரம்பிக்க கனகதுர்க்கை அம்மன் அருள்புரிவார் என்றும் நம்பிக்கை தெரிவித்தார்.இவ்வாலயத்தின் நிர்வாகக் குழு பற்றியும் அவர்களின் கடமைகள் தொண்டுகள் பற்றி விவரங்களைக் கேட்டபோது, அது பற்றி அவர் தெரிவிக்கையில், ஆரம்பத்தில் இத்திட்டம் உருவான போது கைகோர்த்து நின்ற ஒன்பது அம்மன் அடியார்கள் தர்மகர்த்தா சபையின் நிரந்தர உறுப்பினர்களாக இருக்கின்றனர் என்றும் இது தவிர பொது அங்கத்தவர்களால் ஏழு பேர் அடங்கிய நிர்வாகக் குழு ஒன்றும் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது என்றும் குறிப்பிட்டார். அத்துடன் சகல நிர்வாகக்குழு உறுப்பினர்களும் ஆலயத்தின் வளர்ச்சிக்கும் சைவத்தின் மேன்மைக்கும் தமது பணிகளை செவ்வனே புரிந்துவருகின்றார்கள் என்றும் சொன்னார்.

இவ்வாலயத்தின் குருக்களாக சிவஸ்ரீ சுந்தர சர்மா அவர்கள் பணிபுரிகின்றார் என்றும் இவ்வாலயத்தின் அம்மனின் சிறப்புத் தினங்கள் அனைத்தும் சிறப்பாக கொண்டாடப்பட்டு வருகின்றன என்றும் ஏனைய இந்துசமய விழாக்களும் முடிந்தவரை சிறப்பாக கொண்டாடப்பட்டு வருகின்றது என்றும் குறிப்பிட்டார். இம்முறை நவராத்திரி ஆறு தினங்களுக்கு கனகதுர்க்கை அம்மனுக்கு சிறப்பான பூசையுடனும் கலைநிகழ்ச்சியுடனும் நடாத்தப்பட்டது என்றும் கூறினார்.

மேலும் பொதுமக்களின் பங்களிப்பு பணிகள் பற்றி

சுய நலத்தினால் ஒருவரின் விவேகம் மறைகிறது

நான் கேட்டபோது, பின்வருமாறு விளக்கமளித்தார். பொதுமக்களின் பங்களிப்பு அளப்பரியது என்றும் பொதுவாக தங்களின் பங்களிப்பை தம்மால் இயன்றவரை செய்துகொண்டு வருகின்றார்கள்,உதாரணமாக 504 பவுண் கொடுத்து நிரந்தர அங்கத்தவராக சேர்ந்ததோடு மட்டுமல்லாமல் அம்மன் ஆலயத்தின் கட்டிட தேவைக்கான நிதியையும் தந்துதவுகின்றார்கள் என்றும் சொன்னார். அத்துடன் அம்மன் பூசைகளை ஏற்றுக்கொண்டு சிறப்புற செய்து வருகின்றார்கள். இதுதவிர பலவித ஆலய பணிகளை முகம் சலிக்காது செய்துவருகின்றார்கள் என்றும் குறிப்பிட்டார். சின்னஞ் சிறார்கள் கூட தம்மால் இயன்ற ஆலயத்தொண்டுகளை செய்து வருவது மிகவும் பரவசம் ஊட்டுவதோடு ஆலய நிர்வாக சபைக்கு உற்சாகத்தையும் தருகின்றது. இவ்வாலயத்தின் பொதுமக்கள் சம்பந்தமான பணிகள் பற்றி கேட்டபோது தற்போதைய நிலையில் தங்களுடைய முழு நோக்கமும் ஆலயத்தின் நிரந்தர அமைப்பு மட்டுமே என்று தெள்ளத்தெளிவாகக் குறிப்பிட்ட அவர் ஆலயம் கட்டி முடிக்கப்பட்ட பின் பொதுமக்கள் சம்பந்தமான பல பணிகளை தங்கள் ஆலயம் செய்யவுள்ளது என்றும் குறிப்பிட்டார். இவ்வாலயத்தின் நோக்கம் வளர்ச்சி ,அனைத்திலும் லண்டனிலுள்ள ஒவ்வொரு இந்து சமயத்தவரும் உதவ வேண்டும் என்றும் தாழ்மையுடன் கேட்டுக்கொண்டார்.

தங்களுடைய ஆலயம் பற்றி இப்படி ஒரு பேட்டியை பிரசுரிக்க முன்வந்துள்ள சைவமுன்னேற்றச் சங்கத்தின் காலாண்டிதழான கலசம் சஞ்சிகைக்கு எல்லாம் வல்ல கனகதுர்க்கையின் அருள் என்றென்றும் உண்டு என்றும் கூறினார்.

எத்தனையோ ஆலயங்கள் உருவாகிய சரித்திரம் கேட்ட நான் ,லண்டனில் ஒரு ஆலயத்தின் சரித்திரம் கண்முன்னால் உருவாக்கப்படும் நிகழ்வைக் கண்டு கேட்டபோது, உண்மையாகவே உள்ளக்களிப்புடன் அவரிடம் இருந்து விடைபெற்றேன்.

சாத்திரங்களின் சாரம்– நீயே
சம்சாரக்கடலின் தோணியும்–நீயே
மாலவன் மார்பில் திருமகள்– நீயே
மகேசன் வாழ்வில் கௌரியும்– நீயே
பிரிவே உருவாம் சரஸ்வதி–நீயே
நிறைவே ! கனகதுர்க்கா நின்தாள் சரணம்!
–ஆதிசங்கரர்–


# ஒரு அன்பான வேண்டுகோள்

அன்புமிக்க பக்தநெஞ்சங்களே!
லண்டன் மேற்குப்பகுதி மக்களின்
தேவை கருதிக் காலம் தோற்றுவித்த
ஸ்ரீ கனகதுர்க்கை அம்மன்
ஆலயம் நிரந்தரமான ஒரு
அமைவிடத்தைப்பெறக்
காலங்கனிந்துள்ளது.
இத் திருப்பணிக்கு
பக்தநெஞ்சங்களான
உங்களிடம்
ஆதரவு கோரி நிற்கிறோம்.
உங்களால் முடிந்த தொகையினை
கீழே உள்ள முகவரிக்கு அனுப்பி
வைக்குமாறு அன்போடு வேண்டுகின்றோம்.

**SRI KANAKA THURKAI AMMAN TEMPLE**
**(Charity No: 1014409)**
**68, CHESTNUT DRIVE**
**PINNER**
**MIDDLESEX**
**HA5 1LY**


## அருள் மேகம்


இறைவனே ! எனது காய்ந்த இதயத்தில் பல நாட்களாக மழை பொழியவில்லை. ஆகாயம் பயங்கரமான நிர்வாண நிலையில் இருக்கிறது. மெல்லியதோர் மேகத்திரைகூட இல்லை.குளிர்ந்த மழைக்குறியைக் காண முடியவில்லை. இதயத்தைப் பொசுக்கி உருக்கும் இந்த மௌன அழலைத் திரும்ப அழைத்துக்கொள். இதன் ஜுவாலை கொடிது,நெடியது,கூர்மையானது. இதயத்துள் பாய்கிறது அமைதியாய்–கொழுந்து விட்டு எரிந்து என் இதயம் ஏக்கமுற்று வெந்து நீருகும்படி செய்கிறது.

எண்ணத்துக்கும் சொல்லுக்கும் முரண்பாடு ஆகாது

# ஔவை தந்த குறள்

## சிவாயன்

காலத்திற்குக் காலம் உலகம் உய்ய பல மகான்கள் , பேரறிஞர்கள், கவிஞர்கள் தோன்றுவது இயல்பு. இவ்வழியில் தோன்றியவள் தான் ஔவை. ஔவைக்கிழவி நம் "கிழவி" என்று சொந்தம் கொண்டாடுமளவுக்கு



நம்மோடு இணைந்து விட்டவள் ஔவைக்கிழவி. ஔவையினுடைய படைப்புக்கள் தேவாமிர்தம் போன்றவை. "குறள்" என்றவுடன் எமக்கு நினைவில் வருவது திருக்குறளே. ஔவையும் குறள் தந்திருக்கிறாள் என்பது நம்மில் பலருக்குத் தெரியாது. ஆதலினால் தான் ஔவை தந்த குறள் என்ற தலைப்பிலே அவற்றை அறிமுகப்படுத்த முனைந்துள்ளேன்.

310 குறள்மணிகள் ஔவையால் தரப்பட்டுள்ளன. இந்த 310 குறள் மணிகளும் மூன்று பெரும்பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன. அவையாவன வீட்டு நெறிப்பால், திருவருட்பால்,தன்பால், ஆகும். இம்மூன்று பகுதிகளும் முப்பத்தொரு அதிகாரங்களாக பகுக்கப்பட்டு ஒவ்வொரு அதிகாரமும் பத்துக்குறள்களைக் கொண்டதாக அமைக்கப்பட்டுள்ளன.

உலக உய்வுக்காக தம்மை அர்ப்பணிக்கும் மெய்யறிஞர்கள் பெரும்பாலும் குறள் வடிவத்தைத் தேர்ந்தெடுப்பதுண்டு. நிறைந்த கருத்துக்களை குறைந்த சொற்களைக்கொண்டு அமைத்துவிடக் கூடிய தன்மை கொண்டது குறள் என்பதனால் குறள் வடிவத்தைத் தேர்ந்தெடுக்கிறாள்.

நாம் அறிந்த வள்ளுவரின் குறள் , நாம் வாழும் வாழ்க்கையின் ஒவ்வொரு பகுதியிலும் எப்படி எப்படி நாம் வாழ வேண்டும்? எப்படி வாழ்ந்தால் நன்மை அடைய முடியும். என்பவற்றை விரிவாக விளக்கிக் கூறுகின்றது. அறம்,பொருள், இன்பம், வீடு என்ற நால்வகை வாழ்க்கை நோக்கங்களில் அறவாழ்வு பொருள்வாழ்வு,இன்பவாழ்வு ஆகியவற்றை பற்றி விரிவாகக் கூறிய வள்ளுவர் பெருந்தகை வீட்டு வாழ்வைப் பற்றித் தனியாக எதுவுமே கூறவில்லை. ஆனால் ஆங்காங்கு அறத்துப்பாலிலும், பொருட்பாலிலும் சிறிதளவு கூறியிருந்தாலும் "வீடு" என்னும் பகுதி பற்றி தனியாக விரித்து எங்கும் கூறவில்லை. வள்ளுவம் தவிர்த்த இந்த "வீடு" என்னும் பகுதிபற்றி ஔவைக்குறள் நிரம்பக் கூறுகின்றது. ஆதலால் வள்ளுவத்தினைப் படித்து முடித்த கையோடு தொடர்ச்சியாக ஔவைக்குறளையும் படித்தால் தான் நாம் முழுமையடைய முடியும்.

உயிர் அழிவற்றது. காலத்துக்குக்காலம் ஒவ்வொரு உடலெடுத்து வாழ்கிறது. இந்த உயிரானது ஞானஅறிவினைப் பெறும்போது முக்தி இன்பமாகிய வீட்டின்பத்தை அடைகிறது. இந்த உயிர் ஒரு உடலில் குறிக்கப்பட்ட காலம் வாழ்ந்த பின் மறு உடலுக்குப் போவதனை சித்தர்கள் வன்மையாக மறுக்கின்றார்கள். உலகிலுள்ள எல்லா உயிர்களும் பரம்பொருளால் உருவாக்கப்பட்டவையே. அப்படியாயின் ஒவ்வொரு உயிரிலும் பரம்பொருளின் சக்திக்கூறு இருக்கவே செய்யும். இந்தச் சக்திக்கூறினைக் கண்டுபிடித்து ஆன்மா இதனுடன் ஐக்கியமாக வேண்டும். இந்த நிலையில் உடலும் சாகாநிலையை பெற்றுவிடும். இந்த உடலில் உயிர் வாழும்போதே முத்தி நிலை அடைந்துவிடலாம். இன்னுமொரு உடலில் உயிர்பிறக்க வேண்டிய அவசியமே இல்லை என்று உறுதியாகக் கூறுகின்றனர் சித்தர்கள்.

நல்லவனை அவன் செய்யும் நலன்கள் விளக்கிக் காட்டுகின்றன

இந்தச் சித்தர்கள் வரிசையிலே வந்தவர் தான் ஔவையார். இந்த வீட்டின்ப நெறியைப் பற்றி விளக்கமாகக் கூறுகிறார் ஔவையார். உயிரானது தான் எடுத்திருக்கும் உடலைக்கொண்டு பல வினைகளைச் செய்கின்றது. செய்யும் வினைகளுக்கு ஏற்ப மீண்டும் மீண்டும் பிறவி எடுத்து உலக இன்பத்தில் உழல்கின்றது. இந்த நிலை இல்லாமல் வீட்டின்பத்தை அடைய முதலில் பிறப்பின் அர்த்தத்தை அல்லது நிலையை அறியவேண்டும். இதன் விளக்கத்தை வீட்டுநெறிப்பாலில் ஔவையார் பின்வருமாறு கூறுகின்றார்.

**பரமாய சக்தியுள் பஞ்சமா பூதம்**
**தரமாறில் தோன்றும் பிறப்பு**

பரம்பொருளிலிருந்தே சக்தி தோன்றியமையால் சக்தி பரம்பொருளாகவே ஆகிவிட்டவள். இந்தச் சக்தியினுள்ளே பஞ்சமாபூதங்கள் ஒன்றுடனொன்று மாறிக் கலக்கும்போது உயிர்கள் பிறக்கின்றன என்கிறார் ஔவையார்.
சிவத்திலிருந்து சக்தி தோன்றியது. சக்தியிலிருந்து பஞ்சமாபூதங்கள் தோன்றின. இந்தப் பஞ்சமாபூதங்கள்((நிலம் நீர் தீ வளி வெளி ) தங்கள் தரத்திற்கேற்ப கலக்கும்போது உயிர்கள் உலகில் தோன்றுகின்றன.
இவ்வாறு தோன்றிய உயிர்கள் தாம் கொள்ளும் உடல்களுக்கேற்ப வினைகளைச் செய்கின்றன.
**"ஓசை பரிசம் உருவம் சுவை நாற்றம்**
**ஆசைப் படுத்தும் அன்று"**
என்கிறார் ஔவையார்.
அதாவது ஆசை என்கின்ற அதளபாதாளத்தில் உயிரைக் கொண்டு சென்று விழுத்துகின்றவை ஓசை, பரிசம், உருவம், சுவை, நாற்றம் என்கிறார் ஔவையார். மெய் வாய் கண் மூக்கு செவி ஆகிய ஐந்தும் ஐம்பொறிகளாகும். இவ்ஐம்பொறிகளும் உயிருக்கு ஏற்படுத்துகின்ற உண ர்ச்சிகள்தான் ஓசை பரிசம் உருவம் சுவை நாற்றம் ஆகியவையாகும் . இவற்றில் அகப்படாமல் மெய்யுணர்வை அடைந்து பரம்பொருளின் வீட்டை அடைய வேண்டு மென்று ஔவைக்கிழவி எவ்வளவு அழகாக உணர் த்துகின்றாள். இவ்வாறு கூறி ஔவையார் தொடர்ந்து இறைவனைப் பற்றிக் கூறத்தொடங்குகின்றாள்.
**மாயன் பிரமன் உருத்திரன் மகேசனோடு**
**ஆயும் சிவமூர்த்தி ஐந்து**

**மால் அயன் அங்கி இரவி மதி உமையொடு**
**ஏலும் திகழ்சக்தி ஆறு**

**தொக்கு உதிரத்தோடு ஊன் மூளை நிணம் என்பு**
**சுக்கிலம் தாதுக்கள் ஏழு**

**மண்ணொடு நீர் அங்கி மதியொடு காற்றுரவி**
**விண் எச்ச மூர்த்தியொடு எட்டு**

**இவை எல்லாம் கூடி உடம்பாய் ஒன்றின்**
**நவை எல்லாம் ஆனது விந்து**

உலகில் தோன்றிய அனைத்து உயிர்களினதும் இயக்க கர்த்தா இறைவனே. இந்த இயக்கத்தை ஐந்தொழில்களாகப் பிரித்து செவ்வனே நடத்திவருகின்றவனும் இறைவனே. இவற்றை மேற்பார்வை செய்து வருகின்றவர்கள் பஞ்சமூர்த்திகளாவர். இந்தப் பஞ்சமூர்த்திகள் தான் ஔவையார் மாயன்,பிரமன்,உருத்திரன்,மகேசன் என்று கூறுகின்றார். படைத்தலை பிரமனும் , காத்தலை மாயனும், அழித்தலை உருத்திரனும் அருளலை மகேசனும் முடிவான வீட்டின்பத்தை சிவமும் தருகிறது. இப்படி 5 மூர்த்திகளைப் பற்றி கூறிய ஔவையார் தொடர்ந்து ஆறு சக்திகளைப் பற்றிக் கூறுகின்றார்.
சக்தி என்றால் பராசக்தி. இந்தப் பராசக்தி உலக இயக்கத்திற்கு ஆறு வகையாக நின்று உதவுகின்றாள். இந்தச் சக்திகள் மாலி, அயன், அங்கி(நெருப்பு) இரவி(சூரியன்), மதி(சந்திரன்) ,உமை எனக்கூறுகின்றார். இந்த பராசக்தியானவள் காக்கும்போது மாலாகவும் ஒன்றைப் படைக்கும் போது அயனாகவும் அழிக்கும்போது நெருப்பாகவும் வெம்மை நிறைந்தவளாக இருக்கும்போது சூரியனாகவும் குளிர்மையாக இருக்கும்போது சந்திரனாகவும் அருள் வழங்கும்போது உமாதேவியாகவும் விளங்குவதைக் காணலாம். இவ்வண்ணம் ஆறு சக்திகளைக் கூறி தொடர்ந்து ஏழு தாதுக்களைப்பற்றி கூறுகின்றார். தாது என்பது ஒருவகை சத்துப்பொருள். இது உடலின் இயக்கத்திற்கு மிகமிக அவசியமாகும். இது குறையும் போது உடல் நோய்வாய்ப்படுகின்றது. இவை அளவோடு இருக்கும்போது உடல் தேகாரோக்கியம் நிறைந்ததாக இருக்கின்றது.இங்கே தாதுப்பொருள் உடலின் ஏழு இடங்களில் இருக்கின்றதாம். அவையாவன தொக்கு

உண்மை பேசுதல் உயர்ந்தவர்களின் இலட்சியம்

(தோல்),உதிரம்(இரத்தம்),ஊன், மூளை,நிணம் எலும்பு, சுக்கிலம் ஆகியவையாகும். தொடர்ந்து உலக வாழ்க்கைக்கான எட்டு உதவு பொருட்களைப் பற்றிக் கூறுகின்றார். அதாவது நிலம் நீர் நெருப்பு, காற்று சூரியன் சந்திரன் ஆகாயம் ஆகிய எட்டுமாம்.

மண் உணவு விளைய உதவுகிறது. நீர் உணவுகள் விளைய உறுதுணையாகின்றது. நெருப்பு உடலின் வெம்மையைக் காக்கிறது. காற்று உடலுக்கு இதத்தைக் தருகிறது. சூரியன் பருவங்களை உருவாக்குகிறது. விண் மனவெளியின் சிந்தனைகளுக்குதவுகின்றது.

தெய்வமோ இவை எல்லாம் தடுமாறும்போது எல்லாவற்றையும் சரிசெய்கிறது.

பின்பு மேலே கூறிய எல்லாம் சேர்ந்து உடம்பாகிய ஒன்றின் குற்றங்கள் எல்லாமாகியது விந்துவினால் ஆகும் என்று முடிக்கிறார்.

இந்த விந்துவினால் ஐம்பூதங்களும் , ஐந்து மூர்த்திகளும் ஆறு சக்திகளும் ஏழு தாதுக்களும் எட்டு மூர்த்தங்களும் ஆகிய இவை எல்லாம் சேர்ந்து உடம்பு உருவானது என்கிறார் ஔவையார். இப்படி நாம் சிந்தித்தால் உடல் இப்படித்தான் தோன்றியது என சிந்திக்க ஆரம்பித்தால் மெய்யறிவை அறியத்தொடங்கும் முயற்சியில் இறங்கிவிட்டோம் என்பதே அர்த்தமாகும். இத்தோடு நிறுத்தி அடுத்த கலசத்தில் ஔவை உடம்பின் பயன் என்ன என்று கூறுகின்றாள் எனப் பார்ப்போமா?

### வீட்டுக்கு ஒரு பசு

பசுவுக்கு மாடு என்று பெயர் . பசு மாடு என்றால் செல்வம் என்றும் கருத்து . பசு புனிதமானது. எம்மைப் புனிதராக்குவது. எமக்குச் செல்வந்தருவது. எனவே பசுவை இலக்குமி எனவும் கூறுவர். பசுவை வழிபடுதல் வேண்டும். அதனைக் காத்தல் வேண்டும். பசுவைக் காப்பவர் கோபாலர். கோபாலரின் பரம்பரைச் சொத்து பசுவும் பசுவின் பயன்பளுமேயாகும். பசுவின் பயன்களில் நெய்யும் சாணமும் நிலையான வாழ்வைத் தருவன. இறைவனே பசுவின் பயன்பளை நுகர்பவர். ஆடுபவர். ஆள்பவர். இறைவா எங்கள் பசுக்களை காப்பாற்றுவாயாக என்று வேதங்கள் பாடுகின்றன. பசு ஆன்மாவைக் குறிக்கும் சொல். பதி இறைவனைக் குறிக்கும் சொல்.:. எமக்கு உயிர்மேலானது என்று கருதி அவலநிலை வரும்போது பொருள் பண்டங்களை விட்டு ஓடுகின்றோம். பசுக்களை பாதகர் வெட்டி உண்கின்றார்கள். பசுவின் பெருமையை அறிந்து பகையரசர்கள் முற்காலத்தில் பசுக்களை முதலிற் காத்தபின்னரே நாட்டிற் புகுந்து போரிட்டனர். பசு சாதுவான பிராணி என்று குழந்தைகளும் அறிவர். பாதகரிடமிருந்து பசுக்களைக் காத்தல் எமது பாரம்பரிய தர்மமாகும். முன்னொரு நாள் ஆறுமுக நாவலரின் முன்னோரான ஞானப்பிரகாசர் பசுக்கொலைக்கு அஞ்சி வெளிநாடு சென்றார். பசுக்களினின்று நமக்கு இன்பம் சுரப்பதாக என்று நாராயணோபநிஷதம் கூறுகின்றது.

## அருள் விருந்து

1. நல்லார் இணக்கம் உன்னை நல்லவனாக்கும்.
2. நல்லொழுக்கம் எல்லோருக்கும் சொந்தம்
3. பிறவுயிர்களைப் போற்றுவது பணிவின் பண்பு.
4. பணிவிடையால் எதனையும் சாதித்துக்கொள்ளலாம்.
5. உள்ளம் தூயதனால் மனிதன் மேலோங்குகின்றான்.
6. உன் ஆற்றல் யாவும் இறைவனிடம் இருந்து வந்தவை.
7. பிறர் புகழ்ச்சியையும் இகழ்ச்சியையும் பொருட் படுத்தாதே.
8. சட்டப்படி நடப்பவரே சட்டம் நிறுவ வல்லவர்.
9. பணத்தை நல்வழியில் செலவீடுதலே பண்பாகும்.
10. நல்லவனை அவன் செய்யம் நலன்கள் வீளக்கிக் காட்டுகின்றன.


## சமுதாயத்தில் களை போன்றவர்கள்


ஒழுக்கம் கெட்டவர்கள்
அடக்கம் இல்லாதவர்கள்
சுயநலப் பித்தர்கள்
காமவெறி பிடித்தவர்கள்
பேராசையே வடிவெடுத்தவர்கள்
பொய்ச்சாட்சி சொல்லுவோர்

சேவை, தியாகம், பணிவு, வாழ்வுக்கு வெற்றி தருவன

# நித்திய கன்னி

**சாலினி**





ஐந்தெழுத்தின் பெருமையைச் சொல்ல வந்த திருஞான சம்பந்தர்

**" வண்டமரோதி மடந்தை பேணின......................**
**......................அஞ்செழுத்துமே"**

என வண்டமரோதியால் பேணிப்பாதுகாக்கப்பட்டதே 'நமசிவாய என்ற ஐந்தெழுத்து என்று பரவசப்பட்டுக் கூறுகின்றார். அடுத்து

**"பண்டை இராவணன் பாடி உய்ந்தன...................**
**.....................அஞ்செழுத்துமே "**

வண்டமரோதி பேணின அஞ்செழுத்தை, பாடி உய்தவன் இராவணன் என்றும் செப்புகின்றார்.மறைகளைப் பற்றி கூறுமிடத்திலும்

**"ஓதி வாயதும் மறைகளே**
**உரைப்பதும் பல மறைகளே"**

என ஓதியின் வாயிலிருப்பதும் மறைகள் , அவள் சொல்வதும் மறைகள் என ஒன்றுக்கு இரண்டு முறை அழுத்திச் சொல்கின்றார்.

வண்டமரோதி? (வண்டுஅமர் ஓதி) வண்டு அமரும் கூந்தலை உடையவள். ஓதி–குழலி யாவும் கூந்தலையுடையவள் என்பதைக் குறிக்கும். இன்றைய தமிழர்களாகிய நாம் 'ஓதி ' என்ற தமிழ்ச்சொல்லின் கருத்தை அறியாதவர்களாக இருப்பதால் இவளை 'வண்டமர்குழலி ' அன்றேல் 'வண்டார் குழலி ' என்று கூறுவதே பொருந்தும்.

"வண்டார்குழல் அரிவை அன்று அடுத்து" என திருஞான சம்பந்தக் குழந்தைக்கு பின் வந்த சேக்கிழார் சுட்டுவதால் இந்த வண்டமரோதியை நாமும் ' வண்டார் குழலி என்றே அழைப்போம்.

திருமுறைகள் அருளிய சான்றோர்களால் மிகவுன்னத நிலையில் எடுத்தாளப்படும் இந்த வண்டார் குழலி யார்? "ஏழிசை யாழ் இராவணனே " என்று தமிழ் விரகரால் போற்றப்படும் . இராவணன் மனைவி தான் இந்த வண்டார்குழலி அதுமட்டுமல்லாமல் "ஐந்திரமதம்" என்ற நூலை எழுதிய மயனின் மகளும் இவளே.

ஐந்திரமதம் கால இலக்கண நூலாகும். இயற்கையின் ஐந்து இயல் இலக்கணத்தை அ.இ உ எ ஒ என்ற ஐந்தெழுத்தில் தொடங்கி எழுத்து சொல் பொருள் கட்டு

அணி என்ற ஐந்தியல் அமைப்பை ஐந்திரம் மரபை மயன் உண்டாக்குகின்றான். ஐம்புலங்கள் ஐம்பொறிகள் ஐவண்ணங்கள், ஐம்பூதங்கள் அஞ்செழுத்துக்கள் ஐந்தொழில்கள் என்று யாவும் ஐந்தாக அமைவதை எல்லாக்கலைகளிலும் காட்டி இலக்கணம் தீட்டியவன் தான் இந்த வண்டார்குழலியின் தந்தை மயன்.

எனவே "நமசிவாய " என்ற அஞ்செழுத்தை தன் வீட்டுச் சீர்-தனமாக எடுத்துச் சென்றவன் தான் வண்டார்குழலி அதை அவள் பேணிக் காத்ததில் வியப்பில்லை. அவள் கொண்டு சென்ற "நமசிவாய" என்னும் அச்சீர்தனத்தை இராவணன் வீணாக்காது பாடி உய்ந்திருக்கின்றான். பாலறாவாயர் அந்த அருமந்தக் காட்சியை தம் ஞானக்கண்ணால் கண்டு எமக்கும் காட்டுகின்றார்.

இந்த வண்டார்குழலியின் பிறப்பிடம் எது? இதிகாச காலத்தில் விஸ்வகர்மா என்னும் தெய்வச்சிற்பி மாந்தை நகரைஆண்டுவந்தான். இவன் நாகர்கள் வம்சத்தில் வந்தவன். இவனின் மகன் மயன். இலங்கைத் தமிழர்களின் மூதாதையும் அவன் என்பது நாம் உணராதது. நாம் நாகர்களா? இன்றும் ஆந்திர மக்கள் தமிழர்களை "அரவாளு" என அழைப்பதைக் காணலாம். (அரவு-ஆளு) அதாவது பாம்பு மனிதர். பரிபாடல் பாட்டு மதுரையை " நாகர் நகர்" எனப் போற்றிப் பாடுகின்றது. மாந்தையில் உள்ள திருக்கேதீஸ்வரம் பாம்புகளாகிய ராகு, கேதுக்களால் பூசிக்கப்பட்ட சிறப்புடையது. இதனை "அங்கம் ஓழி அந்நாள் அரவு அமரர் தொழுது ஏத்த" என வரும் தேவார அடிகளால் அறிக.

இலங்கையில் மாந்தையில் (மாதோட்ட)நாகர்கள் வாழ்ந்ததை மகாவம்சம் மூலமும் , சீன யாத்திரிகர்களால் Hiouen Thsang , Fa Hien மூலமும் அறியலாம் (The Ceylon Literary Register, Vol 2, Page 216)

இந்த மாந்தையை விஸ்வகர்மாவும் அவன் வழித் தோன்றல்களும் ஆண்டதாக மாந்தைப்பள்ளு பாடிய சிதம்பரத்தாண்டவ மதுரகவிராயர் மட்டுமல்லாமல் (An Historical Political and Statistical Account of Ceylon, Vol 2, Page 496,1849)

சங்ககாலத்தில் மாந்தையில் தமிழர்கள் வாழ்ந்தார்கள். என்பதை சங்கப்பாடல்கள் மூலமும் நாம் அறியலாம். மாந்தையில் வாழ்ந்த தமிழ்க்கன்னியே இந்த வண்டார் குழலி என்பதை நாம் உணரவேண்டும். இராமாயணத்தில் இவள் ஓர் அப்பழுக்கற்ற பாத்திரம் கம்பனும் வால்மீகியும் இவள் புகழ்பாடுவதில் போட்டி போடுகின்றனர். இவர்களுக்கு எல்லாம் ஒருபடி மேலே சென்று மாணிக்கவாசகர்

"உந்து திரைக்கடல் கடந்து அன்று
ஓங்குமதில் இலங்கையதனில்
பந்தனை மெல் விரலாட்கு அருளும்
பரிசு அறிவார் எம்பிரான் ஆவாரே"

என்று வண்டார்குழலிக்கு அருட்பரிசு இறைவன் கொடுத்திருப்பார் என சிந்தித்துப் பார்க்கின்றார். விடை கிடைக்கவில்லை. அவளுக்கு அருளிய பரிசு என்ன என்பதை எம்பிரான் தானறிவான் என நகைச்சுவையோடு கூறுகின்றார்.

போற்றித் திரு அகவலுள்ளும்,

"அலைகடல் மீமிசை நடந்தாய் போற்றி"

என வண்டார்குழலியைத் தெடி இறைவன் சென்றதைப் போற்றுகின்றார். சிவனது திருவருளைப் புகழும் கீர்த்தித் திருவகவலில்

"தேவூர் தென்பால் திகழ் தருதீவில்
கோவார் கோலம் கொண்ட கொள்கையும்"

இலங்கை சிவனருள் பொங்கி விளங்கிய கேதீஸ்வரம் கோணேஸ்வரம், முனீஸ்வரம் நகுலேஸ்வரம் என்பன இயைந்து இருந்த பழம் பதியாதலால் திகழ்தரு தீவு என்றார். கோவார் கோலம் மணவாளக்கோலம் கொண்டு வண்டார்குழலியை ஆண்டதையே இங்கு குறிப்பிடுகின்றார்.

திருக்குற்றாலக் குறவஞ்சியில் தானொருத்தி மட்டும் திரிகூடநாதர் மீது காதல் கொள்ளவில்லை என்று தோழிகளிடம் வசந்தவல்லி கூறுவதாக திரிகூடரா சப்பக்கவிராயர்

"நன்னகிரி ஈசருக்கு நான்றாறோ
ஆசைகொண்டேன் மானே..........
தென்னிலங்கை வாழுமொரு கன்னிகை
வண்டோதரியாள் மானே அவர்
பொன்னடியில் சேர்ந்தனைய என்ன தவம்
செய்தாளோ மானே"

எனப் பாடுகின்றார். அதாவது இவள் கன்னிகையாக இருக்கும் பொழுதே இறைவனுடன் சேர்ந்தவள் என்று கூறுகின்றார். ஆதலால் இவள் "பஞ்ச கன்னியரில்" ஒருத்தியாகப் போற்றப்படும் பாக்கியம் பெற்றுள்ளாள்.

மனிதன் தன்னைத் திருத்தியமைக்கச் செய்வது தவம்

ஏறுபுகழ் பெற்ற தென் இலங்கையர் கோன் இராவணனை மணந்து வில்லின் செல்வன் எனப் போற்றப்படும் மேகநாதனை(இந்திரசித்து) பெற்றெடுத்த போதும் "நித்தியகன்னி" என்றே அழைக்கப்படுகின்றாள். கிறிஸ்தவர்களுக்கு ஒரு கன்னிமேரி போல் சைவத் தமிழ் உலகிற்கு இந்த "நித்தியகன்னி" இருக்கின்றாள். தாய்த் தமிழ் ஈழம் ஈன்றெடுத்த இந்த தெய்வக்கன்னியாம் வண்டார்குழலி புகழ் பாடும் சைவச்சான்றோர்களுடன் சேர்ந்து நாமும் நித்தியகன்னியைப் போற்றுவோமாக!

# மங்கையர் நோற்கும் வரலஷ்மி நோன்பு

நமது சமயத்தில் நோன்பு நோற்க பெண் – ஆண் வேறுபாடில்லை. பாரம்பரியமாக சில விரதங்கள் மகளிரால் செய்யப்பட்டு வருகிறது. அவற்றுள் ஒன்று வரலஷ்மி விரதம். உமாதேவியாரும் வரலஷ்மி நோன்பு இருக்க வேண்டும் என்று சிவன் கூறியதாக புராணக்கதை கூறுகிறது.

இவ்விரதம் ஆவணிமாதம் சுக்லபட்சம் வெள்ளிக்கிழமையில் வரும். சில சந்தர்ப்பங்களில் ஆடி மாதமும் வரக்கூடும். இவ் விரதத்தின் பலன் அனைவருக்கும் இன்றியமையாத பொருள் நீண்ட ஆயுள் , ஆரோக்கியம் , கல்வி மாங்கல்ய பாக்கியம் எனும் சகல சௌபாக்கியங்களும் கிட்டும் என திருமாலின் மார்பில் குடி கொண்ட மகாலஷ்மி அருளுகின்றாள். அஷ்ட லஷ்மிகளும் ஐசுவரியங்களையும் வாரி வழங்கிப் பெருவாழ்வு அளிக்கவேண்டிச் செய்யப்படும் பூசை இது.

மகளிர் இவ்விரதத்தினை நோற்பதனால் மாங்கல்ய பாக்கியத்தை பெற்று இனிதே வாழமுடியும்.

– உமா –

# சிவ விரதங்கள்

ஐம்புலன்களையும் அடக்கும் பொருட்டு உணவை முற்றாகவிட்டு அல்லது அளவைக் குறைத்து மனம், மொழி, மெய் என்ற மூன்றினாலும் கடவுளை உண்மை அன்போடு வழிபடும் விரதமாகும்.

சிவனுக்கு உரிய விரதங்கள் எட்டு வகைப்படும். அவை சோமவார விரதம், திருவாதிரை விரதம், உமா மகேசுவர விரதம் சிவராத்திரி விரதம், கேதார விரதம், கல்யாண சுந்தர விரதம், சூல விரதம், இடப விரதம் என்பன.

காத்திகை மாத முதலாவது திங்பள் தொடங்கி ஒவ்வொரு திங்களும் சிவனைக் குறித்து அநுட்டிக்கும் விரதம் சோமவார விரதம் எனப்படும். இந்த விரதத்தில் உபவாசம் செய்வது உத்தமம். அது முடியாதவர் நண்பகலிற்கு மேல் இரவு மட்டும் ஒரு வேளை உணவு அருந்தலாம். அதுவும் முடியாதவர் நண்பகலிற்குமேல் உணவு அருந்தலாம். இந்த விரதம் வாழ் நாள் முழுவதும் அல்லது பன்னிரண்டு வருடம் அல்லது மூன்று வருடம் அல்லது ஒரு வருடம் அநுட்டிக்கவேண்டும். பன்னிரண்டுமாதமும் அநுட்டிக்க முடியாதவர் கார்த்திகை மாதம் மட்டுமாவது அநுட்டிக்க வேண்டும்.

மார்கழி மாதத்திலே திருவாதிரை நட்சத்திரத்தில் அநுட்டிக்கும் விரதம் திருவாதிரை விரதம் எனப்படும். இதில் உபவாசம் செய்வது நன்று. சிதம்பரத் தலத்திலே விரதம் இருக்கது மிக உத்தமம்.


உமாமகேசுவர விரதம் என்பது காத்திகை மாதப் பௌர்ணமியிலே அநுட்டிக்கும் விரதம். இதற்கு பகலில் ஒரு நேரம் உண்ணலாம். இரவு பழம் அல்லது சிற்றுண்டி உண்ணலாம்.

சிவராத்திரி விரதம் சிவ விரதங்களுள் சிறந்தது. மாசி மாதம் தேய் பிறையில் வரும் சதுர்த்தசி (பதினான்காம் நாள்) திதியிலே அநுட்டிக்கும் விரதம் இது. இதில் உபவாசம் செய்து நான்கு சாமமும் நித்திரை இன்றி சிவ வழிபாடு செய்யவேண்டும். இக் காலம் பஞ்சாட்சரத்தையும் சிவ புராணத்தையும் பாராயணம் செய்து சிவன் கோவிலில் தரிசனம் வெய்வது நன்று.

உபவாசம் செய்ய முடியாதவர்கள் பால் உண்ணலாம். முழு இரவும் விழிக்க இயலாதவர்கள் லிங்கோற்பவ காலம்வரை விழித்திருந்து வழிபாடு செய்யலாம்.

நல்லார் இணக்கம் உன்னை நல்லவனாக்கும்

# எம்மையாளும் ஒன்பதின்மர்



## வாழ்வதிகாரிகள்

நாம் விரும்பினால் என்ன விரும்பாவிட்டால் என்ன நம்மை ஒன்பதின்மர் ஆண்டுகொண்டிருக்கின்றார்கள். அவர்களிடமிருந்து நாம் சுதந்திரம் பெறவியலாது அவர்கள் எம்மை ஆட்கொண்டு ஆட்டியசைத்துக்கொண்டிருக்கின்றார்கள். நாங்கள் இவ்வண்ணம் இருப்பது எங்கள் குற்றமல்ல. எங்களை ஆளும் அவர்கள் குற்றமேயாகும் என்று உலகம் போற்றும் ஒப்பற்ற நாடகாசிரியர் சேக்ஷ்பியரும் கூறியிருக்கின்றார். நாம் பூமியில் ஜனனமான நிமிடந்தொடக்கம் இறுதி மூச்சுள்ளவரை அவர்களின் பிடியிலேயே பிடிபட்டுள்ளோம். அவர்களின் ஆட்சி உலகம் முழுதும் வியாபித்துள்ளது. அவர்களை நாம் அசைக்க முடியாது. அவர்களுக்கு எதிராகச் சதி செய்யவியலாது. வேலை நிறுத்தஞ்செய்யவியலாது. அத்தகைய அதிகாரமும் ஆளுரிமையும் கொண்ட அவர்கள் யார்.

### 1. சூரியன்

எங்கள் தந்தையாரின் வாழ்க்கை, எமது ஆத்மபலம். எமது ஆற்றல் , எமது செல்வாக்கு ஆகியவற்றுக்குஅதிபதிஎமக்கு ஒளியைத் தருபவர். உலகம் போற்றும் உத்தமர். பொழுதை விடிவிப்பவர். உணவை விளைவிப்பவர். ஒப்பற்றவர். நமஸ்காரப்பிரியர். ஞாயிறு தோறும் அவரை நாம் வணங்கி நல்வாழ்வு ஞானம் , ஒளி பெறலாம்.

### உ.சந்திரன்

எங்கள் தாயாரின் வாழ்க்கை, எங்கள் அறிவு வளர்ச்சி, விவேகம், பெறுபேறுகள் ஆகியவற்றை ஆள்பவர்.

### 3.செவ்வாய்

எங்கள் சகோதரர் நிலைமை, காணி,நிலம், விவசாயம், வலிமை, ஆளுமை ஆகியவற்றுக்கு முதல்வர்.

### 4.புதன்

எங்கள் தாய்மாமன்மாரின் நிலைமை,எமது கல்வி வித்தை, விவேகம்,அமைதி, அரசமதிப்பு, இவற்றைக் கண்காணிப்பவர்.

### 5.வியாழன்

குருவானவர் என்று புகழ்பெற்றவர். எங்கள் பிள்ளைகளின் புகழ் மகிழ்ச்சி உடல்நலம், செல்வம் ஆகியவற்றை ஆள்பவர்.

### 6.வெள்ளி

எங்கள் குடும்ப வாழ்க்கை, ஆடை ஆபரணங்கள் சுக போகங்கள், வண்டிவாகனங்கள் , செல்வப்பேறு ஆகியவற்றை ஆண்டுகொடுப்பவர்.

### 7.சனி

சிவபெருமானுக்கு அடுத்து ஈஸ்வரப் பெயர் பெற்றவர். பெரியவர், எமக்கு ஆயுளைத் தருபவர், ஆனால் குறுக்குப் பாதைகளையும் காட்டுபவர். ஆபத்துக்களையும் உண்டாக்கிவிடுபவர்.

### 8.இராகு

எங்கள் தந்தையாரின் முன்னோரைப் பாலிப்பவர். எமக்குப் புத்தி யோசனைகள் உண்டாக்குபவர். எமக்கு அடிமை, குடிமை,ஆதிக்கம் ஆகிய செல்வாக்குகளைத் தருபவர். ஆனால் எம்மைச் சிறைச்சாலைக்கும் செலுத்திவிடுபவர்.

### 9.கேது

எங்கள் தாய்வழி முன்னோரைப் பாலிப்பவர். எமக்கு நரித்தந்திரங்கள் , கபடங்கள், சொல்லித் தருபவர். உல்லாசப்பிரயாணம், பிறநாட்டு யாத்திரைகளைஊக்குவிப்பவர், ஆனால் வாழ்வில் துன்பங்கள், துயரங்கள் தடைகளையும் உண்டாக்கிவிடுபவர்.

பிறர்மீது கொள்ளும் கோபம் தன்னையே அழிக்கும்

# துய்ப்போம் எனின்நோ.........

**– ஞாலக்கோ –**

நம்மிடை வாழும் நம்மவர் பலர் கடவுள் நம்பிக்கையை விட்டு இல்லாததைத்தேடி இடருற்று வாழ்வதைப் பார்க்கும்போது மனம் கொஞ்சம் வருந்துகின்றது. ஆனால் நாவுக்கரசர் கூட ஒரு காலத்தில் மனஉறுதி இன்றி பிறமதம் தழுவி இன்னல்கள் பல உற்று இறுதியாக இறையடி அடைந்தார் என்ற பொழுது மனம் சற்றே அமைதி காண்கின்றது. சைவமதத்திலே என்ன இருக்கிறது?, தமிழ்ப்பண்பாட்டிலே என்ன இருக்கிறது? என்று சிந்திக்காத மனிதர்கள் தான் இவர்கள் என்று சொல்லலாம். சைவமும் தமிழும் நமது இருகண்கள் போன்றவை. ஆனால் நமது வழிபாட்டு முறைகள், செயற்பாடுகளைப் பார்ப்பவர்கள் அவற்றை ஆழமாகப் பார்ப்பதில்லை. நுனிப்புல் மேயும் ஆடுகளைப் போல பார்த்துவிட்டு கருத்தில்லாத மதம் , அர்த்தமற்ற மூடநம்பிக்கைகள் என்று சொல்லித் திரிந்துவிட்டுத் தமக்கு கஷ்டம் வரும்போது மட்டும் சுலபமான வழிகளில் சுகம்பெற நினைக்கின்றார்கள். அப்படி சுகம்கொடுப்பதற்கும் இக்காலத்தில் பலர் இருக்கின்றார்கள். இதனால் தெய்வம் இரண்டாம் பட்சம் ஆகும் நிலை வந்து கொண்டி ருக்கின்றது. இதற்கெல்லாம் காரணம் நம்மிடையுள்ள நல்ல கருத்துக்களை நாம் தெரியாமல் இருப்பதே.

"ஒப்புரவொழுகு" என்று ஔவை மூதாட்டி எழுதியுள்ளார்.

**"செல்லாமை செல்வம்நேர் நிற்பினும் ஒப்புரவுக்**
**கொல்கார் கொடிப்பிறந் தார்."**

என்கிறது ஒரு பழம் தமிழ்ப்பாடல். ஒப்புரவு என்றால் பிறர்க்கு உதவி செய்தல் என்று தானே பொருள். எனவே ஒப்புரவை நாம் மனித சேவை என்று கொள்ளலாம் அல்லவா? நமது அறிவும் நமது செல்வமும் பிறருக்குப் பயன்படும் வகையில் நாம் வாழப்பழகிக்கொள்ள வேண்டும். நமக்கு என்ன பயன் வரும் என்கின்ற நினைவு மனதிலே வந்துவிட்டால் நாம் செய்வது வியாபாரமாகிவிடும். பயன்தூக்காது உதவிசெய்வோமானால் அது ஒப்பு ரவாகிவிடும். "மாரிமாட்டு என்னாற்றும் கொல்லோ உலகு" என்றார் வள்ளுவர் . மழை மேகங்கள் பயன்விரும்பியா மழையைப் பொழிகின்றன? இல்லையே!

மற்றவர்களுக்குச் சேவை செய்வது அல்லது பொருள் உதவுவது என்றால் நேரம் இல்லை என்பவர்களையும் பொருள் இல்லை என்பவர்களையும் தான் பார்க்க முடிகின்றது. சேவை செய்ய நேரம் தேவையா? ஒரு நாள் வேலைக்கு ஒரு அன்பர் காரிலே போய்க்கொண்டிருந்தார். போகின்ற வழியிலே ஒரு கண்பார்வை குறைந்த வயோதிபர் தெருவைக் கடப்பதற்கு காத்திருந்தார். வேகமாக வாகனங்கள் அடிக்கடி போகும் அந்தத் தெருவில் கடப்பதற்கு வசதிகள் ஏதும் இருக்கவில்லை. இந்த அன்பர் தமது காரை ஒரு ஓரமாக நிறுத்திவிட்டு அந்த வயோதிபருக்கு தெருவைக் கடக்க உதவினார். இந்த உதவிக்கு அதிக பட்சம் ஐந்து நிமிடங்கள் எடுத்திருக்கலாம். அது ஒரு பெரிய நேரமல்ல. இப்படி நமது வாழ்க்கையில் தினம் தினம் எத்தனையோ மனித சேவைகளை நாம் செய்யலாம். கல்விக்கு வழிவகுப்பதும் பயன் எதிர்பார்க்காது உதவுவதும் தெரிந்தோர் தெரியாதோர் என்ற பேதமின்றி , என்னென்ன செய்கின்றோம் என்றின்றி உதவி செய்வதும் மனித சேவைகளே. அதைவிடுத்து நாம் மனித சேவை என்றவுடன் அதற்காக ஒரு நேரமொதுக்க வேண்டும், ஓர் இடத்தில் போய் செயற்பட வேண்டும், அப்படிச் செயற்படும் போது, மற்றவர்கள் பார்க்க வேண்டும், புகைப்படங்கள் எடுக்க வேண்டும் என்றெல்லாம் நினைக்கின்றோமே.! இது மனித சேவையாகிவிடுமா?

இனி பொருள் நிலைக்கு வருவோம். பொருள் உதவி செய்வதும் நமக்கு மிகவும் கஷ்டமான ஒன்றாகவே தெரிகின்றது. காரணம் நமது வாழ்க்கை வசதிகளுக்கு நாம் உழைக்கும் பணம் போதுவதில்லை. உழைப்பு அதிகரிக்க அதிகரிக்க நமது செலவுகளும் அதிக ரித்துக்கொண்டே போகின்றன. ஆதலால் மீதமன்று எதுவும் வருவதில்லை. ஆனால் ஈகை என்பதோ அள்ளிக்கொட்டுவதல்ல. இல்லாதவர்களக்கு கொடுப்பது தான். இல்லாதவர்கள் இவ்வளவு தான் வேண்டுமென்று கேட்டு கட்டாயப்படுத்துவதில்லை. நாமாகக் கொடுப்பதைத் தான் வாங்குகின்றார்கள். எனவே எம்மால் இயன்றதை கொடுக்கலாமே!

இன்னொரு அனுபவத்தை இங்கே பார்ப்போம். ஒரு கடைக்கு அண்மையில் சென்ற போது, காதில் விழுந்தது இது. அந்தக் கடைக்காரர் ஒரே தெருவில் மூன்று கடைகள் வைத்து நல்ல வாணிபம் செய்து பொருள் ஈட்டிக்கொண்டிருக்கின்றார். அவர் வியாபாரத்திற்கு விளம்பரம் எதுவும் செய்வதில்லை. எப்படிப்பொருள் ஈட்டுகின்றார் என்று வந்தவருக்கோ ஆச்சரியம். தாங்க

உலக நலனில் உன் நலம் அடங்குதல் நல்லது

முடியாமல் கேட்டும் விடுகின்றார். கடைக்காரரின் பதில் இவரை மேலும் ஆச்சரியத்தில் ஆழ்த்துகின்றது. அவரின் பதில் இதுதான்."நாம் வியாபாரம் செய்து நல்ல பொருள் ஈட்டுகின்றேன். அதில் ஒரு தொகையை அறநிலையங்களுக்கும் அனாதை இல்லங்களுக்கும் அவ்வப்போது கொடுத்துவிடுகின்றேன். அதனால் எனக்கு வியாபாரம் வளர்ந்துகொண்டே போகின்றது." என்கிறார் அந்தக் கடைக்காரர். அவருக்கு வியாபாரம் வளருவதோடு புண்ணியமும் வளர்கின்றது.

நாடாளுகின்ற அரசன் இருக்கின்றான் அவன் உண்பதோ தனது ஒரு வயிற்றுக்குத் தான். மானம் காக்க அவன் உடுப்பது ஒரு வேட்டியும் ஒரு மேலங்கியுமே. அதுபோல வயல் ஒன்றிலே பயிர்களை விலங்குகள் அழியாவண்ணம் பகலும் இரவும் கண்துஞ்சாது கல்வியறிவு அற்ற ஒருவன் காத்துவருகின்றான். அவனும் இந்த அரசனைப் போலத்தான் ஒருமனிதன். அவனுக்கு வேண்டியதும் ஒருவயிற்றுக் கஞ்சியும் உடுப்பதற்கு ஒரு வேட்டியும் ஒரு தோள்த் துண்டுமே. அந்த உணவை நாழி அளவென்று சொல்வர். உடுப்பது இரண்டு துணிகள். புறநானூற்றிலே

"தெண்கடல் வளாகம் பொதுமை இன்றி
வெண்குடை நிழற்றிய ஒருமை யோர்க்கும்
நெடுநல் யாமத்தும் பகலும் துஞ்சான்
கடுமாப் பார்க்கும் கல்லா ஒருவர்க்கும்
உண்பது நாழி உடுப்பவை இரண்டே
பிறவும் எல்லாம் ஓரக் கும்மே......"

என்று வருகின்றது.

தாள் ஆற்றித் தந்த பொருள் எல்லாம் வேளாண்மை செய்தற்பொருட்டு என்றும் பேரறிவாளன் திரு ஊருணி நீர்நிறைந்தற்று எனவும் வள்ளுவர் பாடிப்புகழ்ந்துள்ளார். எனவே நமது உழைப்பின் பயனில் ஒரு பகுதியாவது மற்றவர்களுக்கு பயன்பட வேண்டுமென்பது தெளிவு. அந்த வணிகனும் அதைத்தான் நமக்கு தெரிவிக்கின்றான். இந்த அறிவுரையை நமக்குச் சொல்ல யாரும் வேண்டியதில்லை. மேல் உலகம் இல்லெனிலும் ஈதல் நன்று . எனவே ஈவோம் ,இசைபட வாழ்வோம்

பெரிய புராணத் தோன்றல்களாகிய ஞானசம்பந்தர் சுந்தரர்,ஆகியோரும் மக்களுக்காக இறைவனை பாடி பணிந்து பொற்காசு பெற்று மக்களுக்கு வழங்கினார்களே அன்றி தமக்காக எதையும் தேடிவைக்கவில்லை. இக்காலத்தும் நம்மிடை பல மனிதர்கள் தமது வாழ்க்கையை மனித சேவைக்காக அர்ப்பணித்து நம்மிடை வாழ்ந்து வருகின்றார்கள். அவர்கள் வழிநின்று ஒப்புரவொழுகி ஈந்து வாழ்வோம். செல்வத்துப் பயனே ஈதல் , துய்ப்போம் எனினே தப்புனல் பலவே.

## பெரிய புராணம்

உலகெலாம் உணர்ந் தோதற் கரியவன்
நிலவுலாவிய நீர்மலி வேணியன்
அலகில் சோதியன் அம்பலத் தாடுவான்
மலர்சி லம்படி வாழ்த்தி வணங்குவாம்.

### சந்தர்ப்பம்:

சோழ நாட்டின் அரசன் அநபாயன் என்பான் ஆட்சி செலுத்திக் கொண்டிருக்கும் வேளை அவனுக்கு முதல் அமைச்சராகவிருந்த சேக்கிழார் என்னும் அருண்மொழித்தேவர் அரசனிடம் சென்று " அரசே! தாங்கள் பெரிதும் விரும்பிப் படிக்கும் சீவக சிந்தாமணி என்பது சமண சமயத்தவரின் நூல். அது இம்மைக்கு மட்டும் பயன் தரும் அன்றி மறுமைக்குப் பயன் தராது.அதனைத் தொகுத்துத் தர அடியேனுக்கு அவகாசங் கொடுங்கள் " என்றார் சேக்கிழார்.

அங்ஙனமே அரசன் அமைச்சருக்குப் பொருளும் அவகாசமும் கொடுத்தனுப்பினான்.சேக்கிழார் தில்லைச் சிதம்பரம் வென்று சிந்தனையில் இருக்கும்போது "உலகெலாம்" என்றொரு அசரீரி கேட்டது. உடனே சேக்கிழார் மகிழ்ச்சி கொண்டு "உலகெலாம்" என்று தொடங்கி திருத் தொண்டர் புராணத்தினைப் பாடினார்.

### பொழிப்புரை:

உலக உயிர்கள் எல்லாவற்றினாலும் உணர்வதற்கும் ஓதுவதற்கும் அரியவன். பிறைச் சந்திரனையும் கங்கையையும் சடாமுடியில் தாங்குபவன்.அளவில்லாத ஒளி பொருந்தியவன்.தில்லையில் ஆனந்த நடனம் புரிபவன். இத்தகைய இறைவனுடைய சிலம்பை அணிந்த மலர் போன்ற திருவடிகளை வாழ்த்தி வணங்குவாம்.

சாதனை அதிகரித்தால் உள்ளம் வளர்ச்சி அடையும்

# இந்து சமயம்

இந்து சமயத்தவர் வெளிநாடுகள் பலவற்றில் இன்று வாழ்ந்து வருகின்றனர். இளம் சந்ததியினர் பல்வேறு பட்ட சூழல்களில் வளர்ந்து வருகின்றனர். தமது இனம், மொழி, சமயம், பண்பாடு, என்பனவற்றின் பாரம்பரியத்தையும் சிறப்புக்களையும் தெரிந்துகொள்வது அவர்களுக்கு அத்தியாவசியம். பூரண விளக்கமில்லா விடில் தம்மைப்பற்றிய தாழ்வு மனப்பான்மை ஏற்படுதல் மதமாற்றம் சூழலில் முற்றாக ஒன்றாகி விடுதல் நடைபெற வாய்ப்புக்கள் உண்டு.

வெளிநாட்டவர் பலரும் எமது சமயத்தை பற்றி அறிய ஆர்வமுள்ளவர்களாக இருக்கின்றார்கள். படித்தவர்கள் மத்தியில் இந்து சமயத் தத்துவங்கள் ஈர்ப்பை ஏற்படுத்தியுள்ளன. அந்த வேளையில் வேறு சமயத்தினரிடம் இந்து சமயக் கொள்கைகள் பலவற்றைப் பற்றி தவறான கருத்துக்கள் உள்ளன. நாம் அவர்களுக்கு விளக்கங்களைக் கொடுப்பதோடு கருத்துப்பரிமாறல் செய்ய வேண்டும்.

மேற்கூறிய நோக்கங்களைப் பூர்த்தி செய்வதற்கு இந்துசமய அறிவு அவசியமாகின்றது. இந்தப் பிண்ணனியில் தான் "இந்து சமயம்" என்ற தலைப்பில் ஒரு சில கருத்துக்களை எழுதத் துணிந்துள்ளேன். புலமையுள்ளவர்கள் வாசித்துத் தெரிந்து கொள்ளக்கூடிய இந்து சமய நூல்கள் பலவுண்டு. அவர்களைத் தவிர்த்து சாமானிய மக்களைக் கருத்தில் கொண்டே எழுதப்படுகின்றது.

சமயம் என்றால் கடவுள் நம்பிக்கை , மனிதனுக்கு அப்பாற்பட்ட ஒரு சக்தியை அங்கீகரித்தல், நம்பிக்கை வழிபாடு, என்பனவற்றினைக் கொண்டுள்ள ஒரு தொகுதி. பிரபஞ்சத்தைத் தோற்றுவித்து அடக்கியாளும் மாபெரும் சக்தியில் நம்பிக்கை வைத்து வணக்கம் செலுத்துவதே எனப் பல விளக்கங்கள் உள்ளன.

இந்து சமயம் என்னும் பதம் இந்துக்களின் நம்பிக்கைகளையும் அநுஷ்டானங்களையும் குறிப்பதாகும்.

இந்து என்ற பதம் இந்து சமயத்தில் நம்பிக்கை உள்ளவரைக் குறிக்கும். சிந்து நதிக்கு அப்பால் குடியிருந்த மக்களை எட்டாம் நூற்றாண்டில் பாரதத்தின் மேல் படையெடுத்து வந்த பாரசீகர்கள் "இந்துக்கள்" என அழைத்தார்கள். "இந்து" "இந்தியா" என்ற சொற்கள் அவ்வாறு தான் தோன்றின.

## க. குணரத்தினம்


இந்துக்கள் இன்று உலகெங்கும் வாழ்கின்றார்கள். அவர்களின் எண்ணிக்கை 1991இல் உத்தேசமாக 780 மில்லியன் என்று கணித்தார்கள். இந்தியாவிலுள்ள சனத்தொகையில் 85 சதவிகிதத்தினர் இந்துக்கள். இலங்கை , நேபால், பாலி , கரிபியன், கிழக்கு ஆபிரிக்கா தென்கிழக்கு ஆசியா ஆகிய நாடுகளிலும் மேலும் இன்று மேற்கத்திய நாடுகள் எல்லாவற்றிலும் காணப்படுகின்றது. கிறிஸ்துவுக்கு முற்பட்ட காலம் தொடக்கம் இந்தியாவிலிருந்து வணிகம், குடியேற்றம் காரணமாக வெளியேறிய இந்துக்கள் மூலம் பல நாடுகளிலும் இந்து சமயம் பரவியது. தென்கிழக் காசியாவிலுள்ள சில நாடுகளில் இந்து மன்னர்கள் ஆட்சி செலுத்தியதற்கு சான்றுகள் உள்ளன.

19.36 மில்லியன் மக்களைக் கொண்ட நேபால் இன்று உள்ள ஒரு இந்து ராச்சியம். முடிமன்னர் ஒரு இந்து. 90 சதவீத மக்கள் இந்துக்கள்.

உலகத்திலுள்ள சமயங்களில் இந்து சமயமே மிகவும் தொன்மையானது. உலகிலேயே தொன்மை யானதும் மிக முன்னேற்றமுமான நாகரீகம் மொகஞ்சதாரோ, கரப்பா, சிந்துவெளிநாகரீகம், அதன் காலப்பகுதி கி.மு 2000–3000 என்று கணித் திருக்கின்றார்கள். அகழ்வு ஆராய்ச்சிகளின் மூலம் அதற்குரிய சான்றுகள் பல கிடைத்தன.

ஆசை அறிவை இழக்கும்படி செய்கிறது

சிவன் லிங்கம் சக்தி வழிபாடுகள் இருந்துள்ளன.எனவே ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் இந்து சமயத் தோற்றுவாய் இருந்திருக்கின்றது எனச் சொல்லலாம். கிறிஸ்துவம் 1993 வருடங்களுக்கு முன்னர் பிறந்த கிறிஸ்துவினால் ஆரம்பிக்கப்பட்டது. முகமதியம் கி.பி. 570 இல் பிறந்த நபிகள் நாயகத்தினால்



ஆரம்பிக்கப்பட்டது. பௌத்தம் கௌதம புத்தரினால் கி.மு ஆறாம் நூற்றாண்டில் அதாவது 2500 ஆண்டுகளுக்கு முன்னர் ஆரம்பிக்கப்பட்டது. சமணம், கி.மு 540 இல் பிறந்த மகாவீராவினால் தோற்றுவிக்கப்பட்டது. மற்றச் சமயங்களைப்போல் இந்து சமயத்தைத் தோற்றுவித்தவர் என்று ஒருவரைக் குறிப்பிட முடியாது.

இந்து சமயம் ஒரு சிறந்த சிற்பியினால் ஒரு குறிப்பிட்ட காலத்தில் கட்டி முடித்த ஒரு கட்டடம் போன்றதன்று. ஆலமரம் போன்று கால எல்லையில்லாது பரந்து படர்ந்து வளர்ந்து வந்துள்ளது. அப்படியாக வளர்ந்து வந்துள்ள ஐயாயிரம் வருட காலத்தின்போது இந்தியாவில் ஏற்பட்ட எல்லாச்சமய கலாச்சார இயக்கங்களையும் உட்கிரகித்து தன்மயமாக்கிக் கொண்டது. விவிலிய நூல், திருக்குறான். தம்மபாதம் என்று முறையே கிறித்துவம், முகமதியம் பௌத்தம் ஆகிய சமயங்களுக்கு ஆதிக்கமுள்ள தனிநூல்கள் உண்டு. இந்து சமயத்துக்கு ஆதிக்கம் உள்ள தனி நூல் கிடையாது.

இந்து சமயத்தைப் பற்றி வேதங்கள் (கி.மு 2500–2700 உபநிடதங்கள் (கிமு 8000 ) பகவத்கீதை(கி.மு200–கி.பி.200) இராமாயணம் மகாபாரதம் போன்ற இதிகாசங்கள் புராணங்கள் தத்துவ ஞானிகளின் மதக்கொள்கைகள் பக்தி இயக்கங்களின் கீதங்கள், சித்தர்களின் பாடல்கள், தற்காலத்திய இயக்கங்கள், என்பன கூறுகின்றன. ஆனால் இவற்றுள் ஏதாவது ஒரு பகுதியாவது இந்து சமயத்தைப் பொறுத்தவரை பிரத்தியேகமாக அதிகாரம் உடையது என்று கூறமுடியாது.

பல இந்து சமயப்பிரிவுகளிற்கிடையே கோட்பாடுகள் சம்பந்தமாக மாறுபாடுகள் இருந்து வந்திருக்கின்றன. எனினும் எல்லாக் கோட்பாடுகளுக்கும் இடையே அடிப்படையான ஒரு உற்றுமை உண்டு. வெவ்வேறு பிரிவுகள்மாறுபட்ட விடைகள் தந்தமைக்குரிய காரணம் மாறுபட்ட கேள்விகள் கேட்கப்பட்டதே ஆகும். வேறு சமயங்களில் மாறுபட்ட கொள்கைகளைக்கொண்ட பிரிவுகள் இருக்கின்றன. இது இயற்கையே. எத்தனை மக்கள் இருக்கின்றார்களோ அத்தனை பிரிவுகள் மக்களிடையே உண்டு. கடவுளின் படைப்பு வேற்றுமைகள் உள்ள ஒரு பேற்றினை அளித்துள்ளது. பல பிரிவினதும் வழிபாடு பல சிறுநீரோடைகள்

## வில்வம்

சிவபெருமானை நினைப்பிக்கும் புண்ணிய மரம் வில்வம். சிவபூசைக்கு மிகவுஞ் சிறந்த பத்திரம். திருவருள் கிடைக்கச் செய்வது. இது சிவனுருவாகவே உள்ளது. மருந்து வகைகளில் பெரும் பயன் தருவது. நாங்கள் காணும் வில்வம் மூன்று இதழ்களைக் கொண்டவை. ஆனால் ஐந்து, ஏழு, ஒன்பது, பதினொன்று, பதின்மூன்று, பதினைந்து இதழ்களைக் கொண்ட வில்வங்களும் உள்ளன.

வல்லவனுக்கும் உண்டு வழுக்கும் பாறை

போன்றன.அவை எல்லாம் ஒன்றாக நகர்ந்து சென்று கடவுள் என்ற மகாசமுத்திரத்தைச் சந்திக்கின்றன என இரஜாய் என்றும் இந்தியக் கவி முனி பாடியுள்ளர்.

நிகழ்காலத்திற்கு பொருத்தமானது–

நாம் இன்று விஞ்ஞான யுகத்திலே தொழில் நுட்ப யுகத்திலே இருக்கின்றோம். பல வகைகளில் நமது முன்னோர்களைவிட நாம் அதிஷ்டம் உள்ளவர்கள். பல வசதிகள் உள்ள சமூகத்தில் வாழுகின்றோம் எனினும் தனிப்பட்ட மனிதனும் சமுதாய வாழ்க்கையும் என்று நோக்கும்போது ஒரு இசைவையோ, இணக்கத்தையோ காணமுடியவில்லை. குழப்பமூட்டும் பல பிரச்சனைகள் தோன்றியுள்ளன. இந்தப் பிரச்சனைகளை அடையாளம் காணவும் அவற்றிற்கு தீர்வு காணவும் இந்து சமய நம்பிக்கைகளும் கோட்பாடுகளும் உதவக்கூடியன. சென்ற காலத்தைவிட நிகழ்காலத்திற்கே அவை மிகவும் பொருத்தமானவை. எனவே இந்து சமயக்கோட்பாடுகளில் விளக்கங்களை அறிவது நியாயமானதே.

தொடரும்......

## ஆண்டவன் வரும்போது........

என் தாயார் பிச்சைக்கு வருபவர்களை மிகுந்த அன்புடன் அன்னமிட்டு உபசரிப்பாள். நான் ஒரு சமயம் " என்ன அம்மா! நீ தெருவில் வருகிற சாமியார் , பிச்சைக்காரர்கள் எல்லாரையும் வீட்டுக்குள் அழைத்து உணவளித்து உபசரிக்கிறாயே. ஏன்? என்று கேட்டேன். அதற்கு அவர் " ஆண்டவன் என்றோ ஒருநாள் நேரில் வந்து தோன்றி ஆசீர்வதிப்பார் என்று நான் நம்புகிறேன். அவர் எந்த நேரத்திலும் எந்த உருவத்திலும் எப்படியும் தோன்றும் பேராற்றல் படைத்தவரல்லவா? அவர் இந்த சாமியார்கள் , பிச்சைக்காரர்கள் உருவத்தில் வந்து நான் விவரம் தெரியாமல் மரியாதை காட்டாதிருந்து விட்டால் எவ்வளவு பெரிய பாபியாகி விடுவேன். அதனால்தான் இப்படிச் செய்கிறேன் என்றாள்.

பசித்தவர்க்கு உணவிடுதல் பகவானுக்கே செய்யும் தொண்டிற்குச் சமம்!

– ஆசார்ய வினோபாஜி –

## கருணை செய்வாய் கமலவாணி

இராகம் – ஹிந்தோளம் தாளம் – ஆதி

பல்லவி

கருணை செய்குவாய் கமலவாணியே
கலைகள் யாவையும் காக்கும் ராணியே

அநுபல்லவி

மலர்கள் தூவி உன்னை வாழ்த்தினேன் –என் தாயே
நலங்கள் யாவும் நீடு நல்குவாயே நீயே

சரணம்

பூவினின்று போந்து புன்மையேன்பால் வந்து
நாவில் நீஇருந்து நல்லகவி தந்து
காவியத்தில் இன்பம் கண்டு துய்க்கவேண்டும்
தேவிகாக்க வேண்டும் தர்மம் ஓங்கயாண்டும்

க. உமாமகேசுவரன்


சோம்பேறித்தனம் பாவங்களுட் பெரிய பாவம்

# நல்லை நகர் தந்த நாவலர்

நல்லைநகர் ஆறுமுகப் பெருமானைப் பற்றி அறியாதவர் தமிழ்நாட்டில் யாருமிலர் என்பது உண்மையே. இந் நல்லைநகரானது யாழ்ப்பாணம் என்னும் குடா நாட்டின் தலைநகரமாய் ஒரு காலத்தில் விளங்கியதென அறிவோம். அதற்கு ஆதாரமாய் சங்கிலி என்னும் தமிழரசன் வாழ்ந்த அரண்மனையின் பகுதிகளையும் இன்றும் காணலாம்.

இந்து சமுத்திரத்தின் திலகம் போல விளங்குவது இலங்கைத் தீவு."தென்னாடுடைய சிவனே" என்னும் சிறப்புப் பொருந்திய தமிழ் நாட்டின் ஒரு பகுதியே இவ்விலங்கையென்பது ஆன்றோர்கள் கூற்று. ஆதியிலே பூமியின் கோளாறுகளால் பிளவு ஏற்பட்ட காலத்தில் கால்வாய்கள் மூலமாக கடல் மேற்கொண்டு பிரிந்த பிரிவு இலங்கை.

கந்தபுராணம் , இராமாயணம், பாரதம் முதலிய நூல்களிலே



இவ்விலங்கையின் சிறப்பை மிகவிரிவாக விளக்கியிருப்பதை காணலாம். இத்தீவிலே முத்துக் குளிக்கின்ற கடற்பகுதியும் இரத்தினங்கள் தோன்றுகின்ற தரைப்பகுதியும், தண்டமிழ் வளரும் வட இலங்கையும், சிங்களம் வழங்கும் தென்னிலங்கையும், சைவம் முதல் புத்தம்,கிறிஸ்தவம் முகமதியம் ஆகிய பல்வேறு சமயத்தவர்களும் பல தேச தூதுக் கோஷ்டிகளும், நீர் வளம், நில வளம், மலைவளம், செய்குன்று முதலிய இயற்கை அழகும் பொருந்திய வள நாடு ஆகும்.

திருமதி கண்மணி ஸ்ரீஸ்கந்தராஜா

இத்தகைய சிறப்பு வாய்ந்த ஈழ நாட்டிலே நல்லூரைச் சேர்ந்த திருநெல்வேலியிலே மிகவும் சிறந்த குடியிலே ஞானப்பிரகாச சுவாமிகளின் மரபிலே சிவனை மறவாத சிந்தையுடைய பரம்பரையிலே கந்தப்பிள்ளை என்னும் பெரியாருக்கும் சிவகாமி அம்மையாருக்கும் புத்திரனாகவும் சைவம் சிறக்க வந்த சமயக்குரவனாகவும் தமிழ் அன்னையை ஆதரித்து பெருமையோடு போற்ற வந்த பேரறிஞனாகவும் அவதரித்ததார் ஆறுமுக நாவலர் அவர்கள். சிறுவயதில் தானே அவர் கல்வி வேட்கையுடையவராயும் தமிழிலே விசேட ஆவலுடையவராயும் நீதி நூல்களையும் நிகண்டு முதலிய கருவி நூல்களையும் மனமும் ஆவலுமொத்த நிலையில் கற்று கண்டோர் எவரும் வியப்புற தன் கல்வியில் சிறப்புற்று விளங்கினார். இவருடைய தந்தையார் தமது மூதாதையர் போல் தமிழில் மிகத் தேர்ச்சி பெற்ற ஒருவர். ஆனால் அத்துடன் மருத்துவத்துள்ளும் சிறந்தவராக இருந்தார். தமிழில் பாண்டித்தியம் உள்ளவரே முற்காலத்து மருத்துவ விற்பன்னராயிருந்தது உலகறிந்த விடயம். அவ்வாறே தமிழ் வல்லுனராகிய கந்தப்பிள்ளையவர்களும் தனது வைத்திய திறமையுடன் தமிழையும் வளர்க்க விரும்பி இயல் இசை நாடகம் என்னும் முத்தமிழையும் வளர்க்க வேண்டும் என்றும் ஆவல் கொண்டு அக்காலத்தில்

பொறிவாயில் ஐந்தவித்தான் பொய்தீர் ஒழுக்க
நெறிநின்றார் நீடுவாழ் வார்

ஆர்வம் குன்றி மறைந்து ஒழிந்து விடும் நிலையில் இருந்த இசைக்கலையையும் நாடகக் கலையையும் வளர்த்து உலகிற்கு இசையினால் இறைவன் திருவருளைப் பெறுவதற்கும் நாடகத்தினால் மக்கள் நல்வாழ்வின் விளக்கம் பெற்று வாழ்வதற்கும் உதவி புரிய வேண்டி அநேக நாடகங்களை மிகச் சிறந்த முறையில் எழுதினார் .அக்காலத்து நூல்கள் எல்லாம் ஏடுகளில் எழுதப்படுவது வழக்கம். அவ்வாறே ஒரு நாடகத்தை எழுதிக்கொண்டிருக்கும் நேரம் மண்ணுலக வாழ்வை நீத்தார். அப்போது நாவலருக்கு வயது ஒன்பது."தந்தையின் விருப்பத்தை நிறைவேற்றுவது மைந்தன் கடமை "என்பதற்கு இணங்க தனது தந்தை ஆவலோடு செய்த தொண்டினை நிறைவேற்றி வைப்பது தனது கடமை என மனதில் எண்ணி அந்நாடகத்தின் மிகுதிப்பகுதியை தந்தையின் கருத்தமைய எழுதி நிறைவேற்றினார். அந்நாடகத்தை தனது தமையனிடம் காண்பித்தார். அதைக்கண்டு உற்றார் உறவினர் எல்லோரும் போற்றி மகிழ்ந்து கொண்டனர். அன்று தொட்டு அவர் வெண்பாக்கள் பாடி அதில் வல்லுனர் ஆனார். இவருடைய அறிவு நுட்பங்களைக் கண்டு மகிழ்ந்த உறவினரில் விசுவநாத முதலியார் என்பவரும் ஒருவர். இவருடைய தமிழறிவின் திறத்தோடு ஆங்கிலமும் கற்பிக்க வேண்டும் என விரும்பி பேர்சிவல் துறை நடத்தி வந்த ஆங்கிலப்பள்ளிக் கூடத்தில் இவரைக் கல்வி கற்க விடுத்தனர். மாணாக்கர்களுக்கு இருக்க வேண்டிய அறிவு நுட்பமும் ஆர்வமும் முதற்படியை நோக்கி இருந்ததால் தமிழைப்போல ஆங்கிலத்திலும் வல்லுனர் ஆனார். அதனாலே பேர்சிவல் துரைக்கு தமிழ் ஆசிரியர் ஆனார். அக்காலத்தில் பேர்சிவல் துரை கிறிஸ்தவ நூலாகிய விவிலிய வேதத்தை மொழிபெயர்ப்பு செய்தார். நாவலர் அவர்களுடைய தமிழும் ஆங்கிலமும் செறிந்த அறிவு நுட்பத்தைக் கொண்டு தன்னுடைய மொழி பெயர்ப்புக்கு உதவி செய்யுமாறு நாவலரைக் கேட்டுக்கொண்டார். அதனாலே நாவலர் சைவசமயத்தின் ஆதியும் அந்தமுமாகிய கொள்கைகளை அறிந்ததோடு கிறிஸ்தவ மதத்தின் கொள்கைகளையும் ஐயம் திரிபுற விளங்கிக் கொண்டார். மொழி பெயர்ப்பில் கருத்துக்கள் சிறிதும் மாறுபடாத வண்ணம் பொருளும் சுவையும் ஆங்கிலத்தைப் போலவே விளங்க இனியதும் எளியதுமான தமிழ் சொற்களால் மொழி பெயர்த்து உதவினார்.

இதே காலத்தில் சென்னையிலும் விவிலிய வேதம் மொழி பெயர்க்கப்பட்டது. அவைகளை ஒப்பிட்டு நாவலரவர்களுடைய மொழி பெயர்ப்புக்கே பரிசு வழங்கப்பட்டது. பரிசு பெற்ற புகழுடன் நாவலர் அவர்கள் யாழ்ப்பாணம் வந்து மேலும் புகழ் பெற்றார்.பேர்சிவல் துரை மகனார் தன்னுடைய சமயத்தைப் பரவச் செய்வதற்கு எடுத்த முயற்சிகளெல்லாம் நாவலர் அவர்களுடைய உள்ளத்தில், நம் நாட்டு மக்கள் மொழி ஆர்வமும் சமய ஆர்வமுமின்றி அன்னிய நாட்டவர்களுக்கு அடிமையாகி மிகவும் தாழ்ந்த நிலையில் இருக்கின்றார்கள் என்று வேதனை உருவாகியது. அவ்வுணர்ச்சியால் உந்தப்பட்ட நாவலர் அவர்கள் சித்தாந்த சாத்திரங்களை பிறர் உதவியின்றித் தானே படித்து அதன் ஆழ்ந்த கருத்துக்களைத் தெரிந்து கொண்டார். அதைத் தொடர்ந்து சகல சைவ ஆகமங்களையும் கற்றுத் தெளிந்தார். வேதம் பொது நூலும் சிவாகமம் சிறப்பு நூலும் ஆனதினால் அதைக்கற்பதற்கு வடமொழியும் கற்கவேண்டியிருந்தது. அவர் அதையும் கற்றுத் தெளிந்தார் இவ்வாறு தமிழ், ஆங்கிலம், வடமொழி ஆகிய மூன்றிலும் தேர்ச்சிபெற்ற நாவலர் அவர்கள் சமய உட்கருத்துக்களையும் மொழியின் ஆர்வத்தையும் சகலருக்கும் எடுத்துக்காட்ட ஆவல் கொண்டார்.

பேர்சிவல் பாதிரியார் தன் சமயத்தை வளர்ப்பதற்கு எடுக்கும் பிரயாசத்தைக் கண்டு நாவலர் அவர்களும் இவ்வாறு நமது சைவ சமயத்தையும் தமிழையும் வளர்க்க வேண்டும் என்று மனதில் விரதம் பூண்டார்.தமிழினம் தலை நிமிர்ந்து வாழவும் சைவ சமயம் ஒப்பற்ற தன் மகிமையை உலகிற்குக் காட்டவும் வேண்டுமாயின் தான் பிரமச்சாரியாகவே இருந்தாற்றான் இத் தொண்டை நிறைவேற்றலாமென்று மனதில் துறவியாகவே இருந்து பணியாற்றத் தீர்மானித்தார்.நாவலர் வாழ்ந்த காலத்தில் அநேக தமிழ்ப் புலவர்களும் சிவநெறிப் பெரியார்களும் இருந்தும் மொழியையும் சைவ சமயத்தையும் தங்கள் அளவிலேயே புகழ் பெற வாழ்ந்தார்களேயன்றி உலகத்தவர்களும் அனுபவித்து இன்பமுற வாழவில்லை. ஆகையினால் நாவலர் தமிழை மற்றவர்களுக்கு புகட்டுவதற்காக மாணாக்கர்களைத் திரட்டி அவர்களுக்கு இலவசமுறையாக கல்வியூட்ட முயற்சித்தார். மொழியினாலே மக்களுடைய அறிவும், பண்பாடும், நாகரீகமும் மேன்மையடையும். ஆதியிலே

சிறப்பொடு பூசனை செல்லாது வானம்
வறக்குமேல் வானோர்க்கும் ஈண்டு

உள்ளதான சைவமும் தமிழும் தளர்வுற்றால் தமிழ் நாடெனும் பெயரே அற்றுப்போய்விடும். நமது அரசர் முதல் புலவர் ஈறாக ஆதி காலம் தொட்டு காப்பாற்றிய செல்வத்தை இழப்பது முறையல்லவென்று மிகவும் துடிதுடித்தார்.

**பொருப்பிலே பிறந்து தென்னன் புகழிலே கிடந்து சங்கத்**
**திருப்பிலே இருந்து வைகையாற்றிலே தவழ்ந்த பேதை**
**நெருப்பிலே நின்று கற்றோர் நினைவிலே இருந்து ஓரேன**
**மருப்பிலே பயின்ற பாவை மருங்கிலே வளருகின்றாள்**

என்ற சிறப்பு வாய்ந்த தமிழ்த் தாய் உலகத்தில் முதல் மொழியாக விளங்கியதை எவ்வாறு காப்பாற்ற வேண்டுமென்று எண்ணி தமிழ் நாடெங்கும் சைவப்பள்ளிக்கூடங்கள் அமைக்க வேண்டும். சமய நூல்களை சிறு சிறு புத்தகங்களாக அச்சிட்டு மாணவர்களுக்கும் வளர்ந்தவர்களுக்கும் அளிக்க வேண்டும். கோவில்கள் தோறும் சைவப்பிரசங்கங்கள் செய்ய வேண்டும். கந்த புராணம் இராமாயணம் பாரதம் பெரிய புராணம் , திருவிளையாடற்புராணம்,ஆகியவற்றை கோவில்களிலே படித்துப் பயன் சொல்லுவித்தல் வேண்டும். ஆகிய இக்கைங்கரியங்களை நடாத்துதலே தமிழையும் சைவத்தையும் வளர்க்கும் முறையாகுமென மனதில் உறுதிகொண்டார். இதற்கு போதிய பொருளாதாரம் இல்லாததினால் இத்தொண்டின் உட்கருத்தை விளக்கி துண்டுப்பிரசுரங்கள் மூலமாக தமிழ் நாடெங்கும் அறிக்கை விடுத்தும் ஒருவரும் பொருள் உதவ முன்வரவில்லை. ஆனாலும் தானே சென்று பல பல இடங்களிலும் சொற்பொழிவாற்றி வந்தார். பாடசாலைகள் அமைப்பதற்கும் இலவச நூல்கள் அளிப்பதற்கும் வசதியில்லையே என்ற மனக்கவலையால் ஒருநாள் வழக்கமான சிவபூசை முடிந்தபின் பாடும் வழக்கத்திற்குப் பதிலாக அன்று கூவென்று இறைவனை நினைந்து அழுதார். அடுத்த நாள் ஓர் அன்பர் மிகவும் கூடிய ஒரு தொகை பொருளுதவியை அனுப்பியிருந்தார். இல்லற வாழ்க்கையையே துறந்து நல்லற வாழ்க்கையையே செய்ய விரும்பிய நாவலருக்கு பற்றற்ற மனப்பண்பு உடையவருக்கு இருந்த ஒரு ஆசை சமயப்பணி செய்வதற்கு வேண்டிய பொருளாசை தான். அதற்கு மணிவாசகப் பெருமான் சொல்லிய வண்ணம்“ அழுதால் உன்னைப் பெறலாமே“ என்ற படி அழுதார் இறைவனும் அருள் புரிந்தார்.

அவ்வாறே தான் பிறந்த ஈழ நாட்டிலும் இந்திய நாடாகிய தமிழ் நாட்டிலும் தமிழ்ப்பணியும் சைவப்பணியும் சைவகலாசாலைகளில் புலமைப்பணியும் சிவஞானப்பணியும் தனக்கு ஒப்பாரும் மிக்காரும் இன்றி சைவமக்களுக்கு தமிழையும் சைவத்தையும் மீண்டும் தழைக்க வைத்து இன்றும் அழியாதிருக்க ஆக்கிவைத்த குரவர் இவரே.

யாழ்ப்பாணத்திலும்,சிதம்பரம் முதலிய புண்ணிய பூமியிலும் நிறுவிவைத்த பெரியாரும் இவரே.

ஆகையினாலே நல்லை நகர் ஆறுமுக நாவலர் அவர்கள் நமது நாட்டிலே தோன்றி அழிந்து போகும் நிலையிலிருந்த சைவத்தையும் தமிழையும் வளர்த்தெடுத்து அறியாமை என்றும் இருளில் மூழ்கியிருந்த சைவமக்களுக்கு சிவநெறி காட்டி உய்வித்த பெருமையினால் இவரை ஐந்தாம் சமயக்குரவரென அழைப்பதும் தகுதியாகும். யாழ்ப்பாண நல்லை நகரிலே பிறந்ததனாலே ஈழநாட்டு மக்களுக்கு ஒரு சிறப்பு உண்டென்று பாராட்டி இக்கட்டுரையை வணக்கத்துடன் முடிக்கின்றேன்.

வாழ்க நாவலர் பெருமான்
வாழ்க சிவநெறித் தொண்டு .

## அன்பின் வலிமை

சண்டைக்கும் சச்சரவுக்கும் இரண்டுபேர் தேவைப்படுகிறது. அதேபோல சமாதானம் செய்து கொண்டு ஒத்துப்போகவும் இருவர் தேவை. அன்பெனும் சுடரைத்தூண்டி விட்டா லொழிய இது சாத்தியமில்லை. உங்கள் உள்ளம் முழுவதும் அன்பு வெள்ளம் பாய்ந்து நிறையட்டும்.உங்களுடன் சண்டை போட்டவரின் கண்களை உற்றுப்பாருங்கள்.அங்கே உங்க ளுடைய அன்பு மயமான பிம்பத்தைக் கண்டு தழுவிக் கொள்ளுங்கள்.


அதே நேரத்தில் நீங்கள் பேசிப் பரிமாறிக் கொள்ளத் தேவையில்லை.உங்கள் இருவருடைய கண்களிலும் நிறைந்து நிற்கும் ஆனந்தக் கண்ணீர் உங்களுடைய சச்சரவுக்கு ஆதாரமான வேற்றுமைகளைக் கழுவி நீக்கிவிடும். அந்த நேரத்தில் உங்கள் இருவருடைய மனமும் ஒன்றிவிடும்.இதுதான் அன்பின் சக்தி. இதுவே அதன் முழு வலிமையும் கூட.

–சுவாமி சின்மயானந்தர்–

ஆத்மீக வளர்ச்சிக்கு நேர்மை அடிப்படையானது

# அதிதீரன்

இராமன் தலைகுனிந்து நிற்கும் இடங்களில் இரண்டு குறிப்பிடத்தக்கவை. ஒன்று வாலிவதம், மற்றையது அக்கினிப் பிரவேசம். டாக்டர் எஸ் ராமகிருஷ்ணன் முதல் அகளங்கன் வரை வாலிவதத்தை ஆராய்ந்திருக்கின்றார்கள். ஆனால் சாபவிமோசனம் சிறுகதையிலே அக்கினிப் பிரவேசத்தைப் புதுமைப்பித்தன் அலசி ஆராய்ந்திருப்பது போல அலசி ஆராய்ந்தார் எவருமே இல்லை. இவற்றுக்கெல்லாம் மாற்றீடாக இராமனைக் கம்பன் எடுத்து நிறுத்தும் இடங்கள் இவை எனக் கூறி கம்ப ரஸிகர்கள் குதூகலிக்கும் இடங்களும் சில உண்டு. அவற்றுள் எல்லாம் மிகவும் பிரசித்தமானதொன்று



யுத்த காண்டத்திலே வருகின்றது.

நிராயுதபாணியான இராவணன் தலைகுனிந்து நிற்கின்றான் இன்று போய் போர்க்கு நாளை வா என்கின்றான் இராமன்.

*பேராண்மை யென்ப*
*தறுகணொன் றுற்றக்கா*
*லூராண்மை மற்றத னெ:கு*

என்ற திருக்குறளுக்கு உரை எழுதுகையிலே பரிமேலழகர் ஒரு கணம் இந்த இராமாணய சம்பவத்தை எண்ணிப்பார்க்கின்றார், எழுதியும் விடுகிறார்.

*...ஊராண்மை–உபகாரியாந்தன்மை அதாவது இலங்கையர் வேந்தன் போரிடைத் தன்தானை முழுதும்படத் தமியனாய் அகப்பட்டானது நிலைமை நோக்கி அயோத்தியர் இறை மேற்செல்லாது இன்று போய் நாளைநின் தானையொடு வாவென விட்டாற் போல்வது*

பரிமேழலகர் சொல்வது போல் இராமன் இராவணனுக்கு உபகாரம் ஏதாவது செய்ததுண்டா என்று நினைத்துப் பார்த்தால் திகைப்புத்தான் விஞ்சுகின்றது. இன்று போய் போர்க்கு நாளை வா என்றதுதான் தாமதம் இராவணன் ஓடிவிடுகின்றான். கம்பனுக்கே இது பொறுக்கவில்லை. எவற்றை எல்லாம் இராவணன் போட்டுவிட்டு ஓடு கின்றான் என்று வரிசைப்படுத்திச் சொல்ல வந்தவன் ஈற்றில் "வீரமுங் களத்தே போட்டு வெறுங்கை யோடிலங்கைபுக்கான்'

விழிதீட்டி
க.உமாமகேசுவரன்

என்று வேறு எள்ளி நகையாடிவிடுகின்றார். இப்படிக் கம்பனே இராவணனை எள்ளிநகையாடும்படி விட்ட இராமனை இராவணனுக்கு உபகாரியானான் என்பது எந்தவகையில் ஏற்றுக்கொள்ளத் தக்ககூற்று என்பது தான் நம் முன் நிற்கும் விசுவரூப வினாப்புதிர்.

படைகளையும் படைக்கலங்களையும் தருவி, போர்புரி, என்று கூறி உபகாரியாக இருந்திருக்கக்கூடிய இராமன் அவ்வாறு கூறாது இன்று போய் போர்க்கு நாளை வா என்கின்றான். உண்மையில் இராவணனது மனவு றுதியை பலவீலனப்படுத்தும் நோக்கிலேயே இராமன் இவ்வாறு கூறியிருக்க வேண்டும் என்று தோன்று கின்றது. நான் படைகளையும் படைக்கலங்களையும் தருவிக்கின்றேன், போரிடுவோம். என்றே கூறியிருக்கக் கூடிய இராவணனைக் கேவலம் நாவிழந்து மனவலிமை குன்றிய கோழையாய்த் திரும்பியோடும்படி செய்வதில் வெற்றிபெற்றதோடு எல்லோரது அவமதிப்புக்கும் அவனை ஆளாக்கிவிட்ட இராமன்

மலர்மிசை ஏகினான் மாணடி சேர்ந்தார்
நிலமிசை நீடுவாழ் வார்

இராவணனுக்கு உபகாரியானான் என்பதை விட வேடிக்கை வேறெதுதான் உண்டு.
இராவணன் இறந்துகிடக்கின்றான். அருகிற் சென்று பார்க்கின்றான் இராமன். இராவணன் முதுகிலோ சில தழும்புகள் முதுகிலே புண்பட்டவனுடனா போர் புரிந்தேன். என் மானம்போய்விட்டதே.

*வென்றியா லுலக மூன்று*
*மெய்ம்மையான் மேவி னாலும்*
*பொன்றினா னென்று தோளைப்*
*பொதுவற நோக்கும் பொற்பும்*
*குன்றியா சுற்ற தன்றே*
*மிவனெதிர் குறித்த போரிற்*
*பின்றியான் முதுகிற் பட்ட*
*பிழம்புள தழும்பி னம்மா*

என்று இராமன் புலம்புகின்றான். விபீஷணா போர்ப்புறங் கொடுத்தோர்ப் போன்ற ஆண்டொழி லோரிற் பெற்ற வெற்றியும் அவத்தம் அல்லவா? என்று அலறுகின்றான். ஊண்டாழி லுகந்து தெவ்வர் முறுவலென் புகழை யுண்ண இனி நான் வாழ்வதா?என்று நாணி வேறு சாம்புகின்றான்.
"திக்கு யானைகளோடு இராவணன் போர் புரிந்தான். அவற்றின் கொம்புகள் ஒடிந்து இவன் மார்பில் புதைந்திருந்தன. அநுமன் இவன் மார்பில் ஓங்கி ஒரு குத்துவிட்டான். அவ்வளவு தான் முதுகு வழியாகக் கொம்புகள் வெளியே வந்து விட்டன. அவை வெளியேறிய அடையாளங்களே தவிர இராவணன் புறமுதுகிட்டதால் ஏற்பட்ட புண்கள் அல்ல இவை என்று தேறுதல் கூறுகின்றான் விபீஷணன். இராமன் நிம்மதியடைகின்றான். அப்படியானால்
வீரத்தைக் களத்திலே போட்டுவிட்டு வெறுங்கையனாய் ஓடிய பச்சைக் கோழையுடன் மறுநாட் போர் புரிய இராமன் தயங்கவில்லையே, நாணவில்லையே. எனவே இராமாயணத்தில் வரும் மேற்குறித்த கதா சம்பவத்தை வைத்துக்கொண்டு இராவணனுக்கு உபகாரியானான் இராமன் என்று கூறிவிடமுடியாது இராவணனுக்குந் தனக்கும் தீராப் பழியை விளைவித்தான் இராமன் என்பதை மட்டுமே கூறமுடியும்.
அப்படியானால் ஊராண்மை மிக்க பேராண்மையாளன் என்று எவருமே இல்லையா?
ஊரின் ஒதுக்குப்புறம் ஏனாதிநாதர் வாளும் பலகையும்(கேடயம்) ஏந்திப்போர் புரியும் குறிப்போடு நிற்கிறார். எதிரேஅதிசூரன் வாளேந்திய கையனாய் வருகிறான். இது என்ன? பலகையால் நெற்றியை இவன் ஏன் மறைத்துக்கொண்டு வருகின்றான்.? முன்பு நடந்தவைகளை ஒரு கணம் மனசில் இரைமீட்கிறார் ஏனாதிநாதர்.

ஏனாதிநாதர் மீது அதிசூரனுக்குப் பொறாமை. அவருடைய வாட்பயிற்சிக் கூடத்திற்குத் தான் மாணவர் பலர் வருகின்றார்கள். தன்னிடம் பயில யாரும் விரும்புவதில்லை என்பதுதான் ஏனாதிநாதர் மீதான அவன் பொறாமைக்குக் காரணம். ஏனாதிநாதரைத் தொலைத்து விடவேண்டியது தான் என்று தீர்மானித்துவிட்டான் அதிசூரன். படையுடன் வந்து தோற்றோடிய அதிசூரன் பிறரறியாது தனித்துப்போரிட வாருங்கள் என்று அழைத்தான். இதோ வருகின்றான். சரி வரட்டும். ஏனாதிநாதர் சிரித்துக்கொள்கின்றார். நெருங்கிவந்துவிட்ட அதிசூரன் திடீரென்று பலகையை போர்செய்தற்குரிய நிலையில் வைத்துக்கொள்கின்றான். நெற்றி முழுவதும் ஒரே விபூதிமயம். ஒரு கணம் தான் ஏனாதிநாதர் நிலைமையை சீர்தூக்கிவிடுகின்றார். அட! இவர் சிவனடியாராகிவிட்டார் . இவர் வேண்டுவது என் உயிரை என்றால் அவரே அதை எடுத்துக் கொள்ளட்டும். உயிரை வழங்கிவிட்டால் மட்டும் போதுமா? நிராயுதபாணியைக் கொன்றார் என்ற பழியும் இவரைத் தொடக்கூடாதே! அடுத்த கணமே அருமையானதொரு முடிவுக்கு ஏனாதிநாதர் வந்து விடுகின்றார். அந் நின்றதொண்டர் திருவுள்ளம் யாரறிவார்? அறிந்தவரில் ஒருவரான சேக்கிழார் சொல்லுகின்றார்

*கைவா ளுடன்பலகை*
*நீக்கக் கருதியது*
*செய்யார் நிராயுதரைக்*
*கொன்றா ரெனுந்தீமை*
*யெய்தாமை வேண்டு*
*மிவர்க்கென் றிரும்பலகை*
*நெய்வா ளுடனடர்த்து*
*நேர்வார்போ னேர்நின்றார்*

ஏனாதிநாதர் எதிரியுடன் போர்புரியவில்லை புரிவது போல் நடிக்கின்றார். முன்னின்ற பாதகனோ(அதிசூரன்) தன் கருத்தை மிக எளிதாகவே முற்றுவித்து விடுகின்றான்.

இருள்சேர் இருவினையும் சேரா இறைவன்
பொருள்சேர் புகழ்புரிந்தார் மாட்டு

நிராயுதபாணியை கொன்றான் என்ற பழி அதி சூரனுக்கு வாராதபடி காத்துவிட்டார் ஏனாதிநாதர் இவர் அன்றோ! ஊராண்மை என்ற பண்பின் கொடுமுடி கண்டவர் . ஏனாதிநாதர் எங்கே? இராமன் எங்கே?நம் காவியப்பரப்பு முழுவதிலும் பகைவனுக்கும் அருளிய பண்பினை – ஊராண்மையினை –நாம் காண்பது ஏனாதிநாதர் என்ற அதிமனிதர் ஒருவரிடம் தான்.

வள்ளுவர் கூறும் ஊராண்மை என்ற உயர்ந்த பண்புக்கு இலக்கியமாக இராமனைத் தேர்ந்து கொண்டது பரிமேலழகர் விட்ட இமாலயத்தவறு. பரிமேழலகரின் இத்தகைய சறுக்கல்களே

**................சங்கரருடைய உரைக்கும் நூலுக்கும் சம்பந்தமில்லை. பரிமேழலகரைக் கிளப்பிவிட்டது சங்கரருக்குப் போல நூலின் மகிமையும் அழகிய பாஷைநடையுமே**

எனச் சமய சாதகரான மகான் பொ. கைலாசபதி அவர்கள் கூறக்காரணமாக இருந்திருக்க வேண்டும். இரண்டு பண்புகளின் அடிப்படையிலே தான் பேராண்மை என்ற பண்பை வள்ளுவன் இனம் காண்கின்றான். ஒன்று ஈனஇரக்கமின்றி கொன்று குவிக்கும் தறுகணனாயிருத்தல் என்னும் பண்பு சார்ந்தது. பெரியபுராணத்தில் வரும் அடியார் பற்றி திருக்கூட்டச் சிறப்பில் உரைக்கும் சேக்கிழார் இவர் வீரம் என்னால் விளம்பும் தகையதோ என்று கூறி விம்மிதம் உறுகின்றார். எனவே பேராண்மையோடு ஊராண்மை என்ற பண்புடையராய் திகழ்ந்த ஏனாதிநாதரையும் வீரன் என்று தான் சேக்கிழார் குறித்தார் என்பது தெளிவு. இங்ஙனம் பொதுப்படக் குறித்ததன்றி ஏனாதிநாதர் வரலாற்றில் அவர் ஏதும் தனிப்படக் குறித்தார் அல்லர். எனவே பேராண்மைக்கும் மேலே ஊராண்மை என்ற ஒப்பற்ற பண்புடையாரை வீரர் என்பதோர் மரபிருந்ததோ என்பது சிந்தனைக்குரியது. பிறன்மனை நோக்காத பண்பையும் வள்ளுவர் பேராண்மை என்றே குறிப்பர்.

*பிறன்மனை நோக்காத*
*பேராண்மை சான்றோர்க்*
*கறனொன்றோ வான்ற*
*வொழுக்கு*

எனவே பேராண்மை என்ற பண்புக்கான இரண்டாவது அடிப்படை பிறன்மனை நோக்காமை என்பது பெறப்படும்.

# இனிப் பிறிதொரு காட்சி

அடியவர் ஒருவர் வருகின்றார். தூயநீறு விளங்கும் பொன் மேனி அவருக்கு. ஆனால் தூர்த்தரோ என ஐயுறவைக்கும் தோற்றம் . உம்முடைய மனைவியைத் தாரும் " என்று இயற்பகை நாயனாரிடம் கேட்கின்றார். அடியார் கேட்பதெதையும் மறுப்பதில்லை என்ற விரதர் இயற்பகை. ஒருகணமேனும் தாமதிக்கவில்லை.

"தந்தேன்" என்று கூறிவிடுகின்றார்.

"நீர் தந்துவிடுவீர் உமது உற்றாரும் ஊரவரும் அதை ஒப்புவார்களா? ஊர் எல்லை வரை பாதுகாப்பாக என்னை அழைத்துச் செல்லும். " என்கிறார் அடியவர். இயற்பகை உடன் செல்கின்றார். உற்றார் உறவினர்கள் வருகின்றார்கள்.

" இயற்பகைக்குப் பைத்தியம் என்றால் நாம் சும்மா இருந்துவிடுவோமா? " என்று கொக்கரிக்கின்றார்கள் . சுற்றிவந்து சூழ்கின்றார்கள். இயற்பகை அனைவரையும் கொன்றுவிடுகின்றார். திருச்சாய்க்காடு என்ற தலம் வந்து சேர்ந்ததும் மீண்டு உம் ஊர்போம் என்கிறார் அடியவர். திரும்பிப் பராது திரும்பிவிடுகின்றார் இயற்பகை. பொய் தரும் உளமில்லான் பார்க்கிலன் போனான் என்று அடியவராய் வந்த சிவன் மகிழ்கின்றார். எப்பொழுது மனைவியை மற்றொருவருக்கு இயற்பகை வழங்கிவிட்டாரோ அப்பொழுதே அவள் மாற்றான் மனைவியல்லவா? அவளை இனி அவர் பார்ப்பாரா? பிறன்மனை நோக்காமை பேராண்மை என்றால் தன் மனையைத் தானே பிறர்க்குத் தந்து பார்க்கிலன் போனானே . அவனையும் அதே வரிசையில் வைத்து பேராண்மையாளன் என்பது சரியா? எனவே தான் சிவன் இயற்பகையைத் தீரன் என்றார் போலும். செயற்கரும் செய்கை செய்த தீரனே ஓலம் என்று தான் சிவன் ஓலமிட்டு அழைத்தார் என்கின்றார் சேக்கிழார். பேராண்மை, வீரம், தீரம் என்று படிப்படியான வளர்ச்சிப்படிகள் உண்டு போலும் என்று இப்போது எண்ணத்தோன்றுகின்றது நமக்கு. அருணகிரிநாத சுவாமிகளோ அவ்வாறு உண்டு போலும் என்ன உண்டேதான் அதிதீரன் தான் அடுத்தபடி என்று வேறு வலியறுத்தியும் விடுகின்றார்.

வேண்டுதல் வேண்டாமை இலானடி சேர்ந்தார்க்கு
யாண்டும் இடும்பை இல

இரக்கமின்றிக் கொன்று குவிப்பவன் பேராண்மையாளன் என்றால் பகைவனுக்கு உபகாரியாகும் தன்மை வாய்ந்தவன் ஊராண்மையாளன் வீரன் ஆகின்றான். பிறன் மனை நோக்காதவன் பேராண்மையாளன் என்றால் தன் மனையையே பிறன்மனையாகக் கருதி நோக்காத இயற்பகை தீரன் ஆகின்றான்.

அப்படியானால் .........

*முப்புரம் எரிசெய்த*
*அச்சிவன் உறைரதம்*
*அச்சதுபொடி செய்த*

விநாயகன் எப்படிப்பட்டவனாய் இருப்பான். அவன் அதிதீரனாகத் தானே இருக்க வேண்டும். முப்புரம் என்பது மும்மல காரியம் என்பர் திருமூலர். மும்மல நீக்கம் புரியம் சிவனுக்கே விநாயகன் துணை வேண்டுமானால் விநாயகன் அதிதீரனே! சந்தேகம் என்ன?

சேக்கிழார் வள்ளுவர் இருவரும் தெய்வப்புலவர் வரிசையைச் சேர்ந்தவர்கள். தெய்வப்புலவர் வரிசை வேறு கவிச்சக்கரவர்த்திகள், கவிஞர்கள் வரிசை வேறு. சொற்களைப் பிரயோகிக்கும் தனித்துவ ஆற்றலால் வரிசை அறிய வைக்கும் தெய்வப்புலவர் அருளாளர் என்போர் திறனை என்னென்பது?

# வணங்கு

வினைகள் தீரவேண்டுமானால், செய்கின்ற காரியங்கள் செம்மையாக நடைபெறவேண்டுமானால் விநாயக மூர்த்தத்தை வணங்கு.

அழகும் வீரமும் ஞானமும் வேண்டுமானால் முருகப்பெருமானை வணங்கு.

இவ்வுலகில் எல்லாவிதமான இன்ப ங்களும் அடைய வேண்டுமானால் திருமாலை வணங்கு.

எல்லா சக்திகளையும் பெற்றுத் தீரனாக, தைரியவானாக விளங்க வேண்டுமானால் அம்பிகையை வணங்கு.

கல்வியை விரும்பினால் சரஸ்வதியை வண ங்கு.செல்வத்தை விரும்பினால் திருமகளை வணங்கு.

முக்தியை விரும்பினால் சிவபெருமானை வணங்கு. இவையெல்லாம் இறைவனின் அநுக்கிரக மூர்த்தங்கள்.

# பதினாறுவித ஆராதனைகள்
## சோடச உபசாரம்

திருக்கோயில்களில் வசந்த மண்டபத்தில் நிகழும் பூசைவேளையில் காண்பிக்கப்படும் பதினாறுவகை உபசாரங்கள் யாவும் எங்களுக்கு நன்மையுண்டாகுமாறு செய்யப்படுவனவேயாம்.அவற்றின் பல் பயன்கள் வருமாறு.

| | |
|---|---|
| 1.தூபம் – | உற்சாகம் |
| 2.தீபம் – | விழிப்பு |
| 3.மகாதீபம் – | அரசபோகம் |
| 4.நாகதீபம் – | உயர்பதவி |
| 5.விருஷதீபம் – | அரசு |
| 6.புருஷாமிருகதீபம் – | பிணிநீக்கம் |
| 7.சூலதீபம் – | ரோகநிவாத்தி |
| 8.கமடதீபம் – | நீர்ப்பய நீக்கம் |
| 9.கஜதீபம் – | செல்வம் |
| 10.வியாக்கிரதீபம் – | துட்டநிவர்த்தி |
| 11.சிம்மதீபம் – | ஆயுள் விருத்தி |
| 12.துவஜதீபம் – | செல்வம் |
| 13.மயூரதீபம் – | மக்கட்பேறு |
| 14.கும்பதீபம் – | சாந்தி,மங்களம் |
| 15.நட்சத்திரதீபம் – | ஆதிபத்தியம் |
| 16.மேருதீபம் – | மேலான நிலை |

# யோகசுவாமிகள் நற்சிந்தனைகள்
## சிவத்தியானம்

ஓ! மனிதனே சற்றுப் பொறுமையாய் இரு.!
நீ யாரெனத் தெரிந்து கொள்வாய்.!
துயருறத் தகாத காரியங்களில் துயருறாதே!
துன்பமும், இன்பமும், உலக நடவடிக்கைகள்.
நீ! சித்துப் பொருள்!
உன்னை ஒன்றும் தாக்க மாட்டாது!
எழுந்திரு!
விழித்துக்கொள்!
சிவத்தியானம் என்னும் திறவு கோலால் மோட்ச வீட்டின் கதவைத் திறந்து பார்!
எல்லாம் வெளியாகும்.
ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

# சைவநூல்கள்

சைவசமயம் மிகப் பழமையானது. இதிலுள்ள நூல்கள் எண்ணிறந்தன. வேதங்கள் முதல்நூல்கள் எனப்படும். அவை இருக்கு, யசுர், சாமம், அதர்வம் என நான்காம். வேதங்களை சிவபெருமானே அருளினார் என்றும் குரு சீட முறையில் நிலவிவந்த அவற்றை நான்காக வகுத்தவர் வியாச மகாமுனிவர் என்றும் கூறப்படும்.

வேதங்கள் இறைவன் புகழ் இயம்ப, ஆகமங்கள் அவனை வழிபடும் முறைகள்–கிரியைகள் பற்றி விவரிக்கும். இவை காமிகம் , யோகஜம், சிந்தியம், காரணம், அஜிதம், தீப்தம், சூக்குமம், சகசிரம், அம்சுமான், சுப்பிரபேதம், விஜயம், நிச்சுவாசம், சுவாயம்புவம், ஆக்கிநேயம், வீரம், ரௌரம், மகுடம், விமலம், சந்திரஞானம், முகபிம்பம், புரோற்கதம், லலிதம், சித்தம், சந்தானம் ,சர்வோத்தம், பாராமேஸ்வரம், கிரணம், வாதுளம் எனும் இருபத்தெட்டாம். இவ்வாகமங்கள் ஆன்மாக்கள் இறைவனை அடைதற்குரிய சரியை , கிரியை, யோகம், ஞானம் ஆகிய நான்கு மார்க்கங்களையும் தனித்தனிப் பிரிவுகளாகக் கொண்டவை. வேதம் பொதுநூல் என்றும் ஆகமம் சிறப்புநூல் என்றும் சொல்லப்படும். ஆகமங்களைச் செய்தருளியவரும் சிவபெருமானே என்பதை சிவாகமங்கள் என்ற சொல் குறிக்கும்.

வேதங்களை அடுத்து வேதாங்கங்கள், சூத்திரங்கள், உபநிடதங்கள், இதிகாசங்கள், புராணங்கள், உபபுராணங்கள் ,சாத்திரங்கள், முதலாயின தோன்றின. இராமாயணம், பாரதம் என்பன இதிகாசங்கள். புராணங்கள் பதினெட்டு. அவை சைவம், பவிஷ்யம், மார்க்கண்டேயம், இலிங்கம், காந்தம், வராகம், வாமனம், மற்சம், கூர்மம், பிரமாண்டம், பிரம்மம், பதுமம், காருடம், நாரதீயம், விஸ்னு, பாகவதம், ஆக்கிநேயம், பிரமகைவர்த்தம் என்பன. இவற்றுள் முதல் பத்தும் சிவபுராணங்கள், அடுத்த இரண்டும் பிரம புராணங்கள். அடுத்த நான்கும் விஷ்னு புராணங்கள். ஆக்கிநேயம் அக்கினி புராணமும் , பிரமகைவர்த்தம் சூரியபுராணமுமாம்.

மேற்கூறிய எல்லாமுமே வடமொழி எனப்படும் சமஸ்கிருதத்தில்ஆனவை. சிவ புராணங்களுள் ஒன்றாகிய காந்தத்தில் கூறப்பட்டவற்றுள் சிறப்பான நிகழ்வுகளைத் திரட்டிக் காஞ்சி கச்சியப்ப சிவாச்சாரியார் தமிழில் கந்தபுராணம் என்னும் நூலை 10345 செய்யுட்கள் கொண்டதாகச் செய்தருளினார்.

தமிழில் அதி உயர் சைவநூல்களாகப் போற்றப்படுபவை பன்னிரண்டுதிருமுறைகள் பதினான்கு சித்தாந்த சாத்திரங்கள் என்பன. இவைதவிர பல்வேறு புராணங்களும் அருணகிரிநாதர் அருளிய திருப்புகழ், கந்தர் அலங்காரம், கந்தர்அநுபூதியும், தாயுமான சுவாமிகள், பட்டினத்தடிகள், பதினெண் சித்தர்கள், குமரகுருபரர் , அபிராமிப்பட்டர், இராமலிங்க வள்ளலார், சிவயோக சுவாமிகள் போன்ற அருளாளர்கள் அருளிச் செய்த பனுவல்களும் போற்றப்படுபவையே.

பன்னிரண்டு திருமுறைகளுள் திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார் அருளிய தேவாரங்கள் 1,2,3,ஆம் திருமுறைகளாகவும், திருநாவுக்கரசு நாயனார் அருளிய தேவாரங்கள் 4,5,6 ஆம் திருமுறைகளாகவும் சுந்தரமூர்த்தி நாயனார் அருளிய தேவாரங்கள் 7ஆம் திருமுறையாகவும், மாணிக்கவாசக சுவாமிகள் அருளிய திருவாசகம் திருக்கோவையார் என்பன

மு.சிவராசா

எட்டாம் திருமுறையாகவும் வகுக்கப்பட்டுள்ளன. இவர்கள் நால்வரும் சைவசமயக்குரவர் எனப்படுவர். திருமாளிகைத்தேவர் முதலிய ஒன்பதின்மர் அருளிச்செய்த திருவிசைப்பா, சேந்தனார் அருளிச்செய்த திருப்பல்லாண்டு,ஆகிய பனுவல்கள் ஒன்பதாம்திருமுறை, திருமூலநாயனார் செய்தருளிய 3000 பாக்களைக் கொண்ட திருமந்திரம்

மரத்தின் கோணலை நீக்குவது சுண்ணாம்பு நூல்
மனத்தின் கோணலை நீக்குவது அறிவு நூல்

பத்தாம்திருமுறை. திருவாலவாயுடையார் என்ற பெயரில் சிவபெருமானே அருளியதான திருமுகப்பாசுரம், காரைக்கால் அம்மையார் முதலிய இன்னும் பதினொருவர் அருளிச்செய்த பிரபந்தங்கள்,என்பன பதினொராம் திருமுறையுள் அடங்கும். இவ்வாறு பதினொரு திருமுறைகளையும் நம்பியாண்டார் நம்பி என்பவர் வகுத்தார். அதன் பின் இரண்டாம் குலோத்துங்க சோழன் காலத்தில் சேக்கிழார் பெருமான் செய்தருளிய திருத்தொண்டர் பெரியபுரா ணம், அவ்வரசன் வேண்டுகோட்படி பன்னிரண்டாம் திருமுறையாகச் சேர்க்கப்பட்டது. இவை பன்னிரண்டு திருமுறைகளும் தமிழ் தெரிந்த சைவமக்களுக்கு அரும்பெரும் வைப்பு நிதியாகும். இவை தோத்திர நூல்கள், பொருளுணர்ந்து சொல்லுவோர் கேட்போருக்கு உள்ளத்தில் பக்திப்பெருக்கை ஊற்றெடுக்கச்செய்வன

இவைகளுக்குப் பின் அருளிச்செய்யப்பட்டனவே அருணகிரிநாதர் திருப்புகழ். கந்தர் அலங்காரம், கந்தர் அநுபூதி, தாயுமானசுவாமிகள் பாடல்கள், பட்டினத்தடிகள் பாடல்கள், அபிராமிப்பட்டரின் அபிராமி அந்தாதி, குமரகுருபரசுவாமிகளின் கந்தர் கலிவெண்பா, சகலகலா வல்லிமாலை, இராமலிங்கவள்ளலாரின் திருவருட்பா, சிவயோக சுவாமிகளின் நற்சிந்தனை முதலாயினவும் இன்னும் பல்வேறு அருளாளர்களின் பனுவல்களும். தோத்திர நூல்களில் பொதிந்துள்ள சித்தாந்த உண்மைகளை முறையாக விளக்க எழுந்தவை சாத்திர நூல்கள். அவை திருவியலூர் உய்யவந்த தேவனாரின் திருவுந்தியார், திருக்கடவூர் உய்யவந்ததேவனாரின் திருக்களிற்றுப்படியார், மெய்கண்டதேவரின் சிவஞானபோதம் அருணந்திசிவாச்சாரியாரின் சிவஞானசித்தியார், மனவாசம் கடந்தாரின் இருபா இருபஃது, உமாபதி சிவாச்சாரியாரின் உண்மைவிளக்கம்,சிவப்பிரகாசம், திருவருட்பயன், வினாவெண்பா, போற்றிப்பஃறொடை, கொடிக்கவி, நெஞ்சுவிடுதூது, உண்மை நெறி விளக்கம், சங்கற்பநிராகரணம், என்னும் பதினான்காம். சித்தாந்த சாத்திரங்களில் கூறப்படுவனவற்றின் பிரிவு– என்றும் உள்ள பொருள்கள் பதி(கடவுள்) பசு(ஆன்மாக்கள்) பாசம்(ஆணவம், கன்மம், மாயை முதலானதளைகள்) என மூன்றாம். பதி இயல்பாகவே பாசங்களின் நீங்கியவர். பசுக்கள் அநாதியே பாசங்களால் பிரிக்கப்பட்டுள்ளன. அவை பதியின் அருளால் கன்மம் , மாயை ஆகியவற்றினின்றும் விடுபட்டு ஆணவத்தின் வலியடங்கப்பெற்று பதியின் திருவடி நீழலில் சுகித்திருக்கும் என்பது. நமக்கு இந்தச் சரீரம் கிடைத்தது நாம் கடவுளை வணங்கி முத்தியின்பம் பெறும் பொருட்டேயாம் என நாவலர் பெருமான் கூறியுள்ளதும் அதுவே. தமிழில் செய்யப்பட்டுள்ள புராண நூல்களுள் தலையாயவை பெரியபுராணம் ,கந்தபுராணம், திருவிளையாடற்புராணம், திருவாதவூரடிகள் புராணம், என்பன. இதைத்தவிர தணிகைப்புராணம், திருச்செந்தூர்ப்புராணம், கோயிற்புராணம், சேக்கிழார் புராணம். முதலாயின பல உள. தமிழறிந்த சைவ மக்கள் தோத்திர சாத்திர புராண இதிகாச நூல்களை இயன்ற அளவில் கற்று இறையுணர்வைப் பெருக்கிக் கொள்வதால் பிறவிப்பயனைப் பெறலாம்.

**தீவினைப்பயன்**

பாலப்பருவத்தில் தாயை இழத்தில்
காளைப் பருவத்தில் மனைவியை இழத்தல்
முதுமைப் பருவத்தில் புதல்வரை இழத்தல்

## நமது பிரார்த்தனை இறைவனுக்குக் கேட்கும்

அறிவியல் பேரறிஞர்களுள் ஒருவராகிய மார்க்கோனி என்பவர் தாம் காலை மாலை வேளைகளிற் செய்யும் பிரார்த்தனை எங்கேயோ இருக்கின்ற இறைவனுக்கு எங்ஙனம் கேட்டல் இயலும்? என்று தமக்குச் சிறுவயதில் இருந்த ஐயப்பாடு, கம்பியில்லாத் தந்தியைத் தாம் கண்டுபிடித்துப் பயன்படுத்தியபின் தீர்ந்துவிட்டது, என்றும் அன்பர்கள் செய்யும் வேண்டுகோள் களையெல்லாம் , உலகம் எங்கும் நீக்கமற நிறைந்து நிற்கும் இறைவன் செவிமடுத்து அருள்கிறான் என்பது உண்மை.

நாவடக்கம் இல்லாதவன் சினத்தை வெல்லமாட்டான்

# திருப்புராணம் எனும் பெரிய புராணம்

அருட்கலைத்திலகம்
மானியூர் சி. குமாரசாமி ,எம்.ஏ

சைவாலயங்களிலும் சைவசமய விழாக்களிலும் திருமுறைகளிலுள்ள தேவாரம், திருவாசகம், திருவிசைப்பா, திருப்பல்லாண்டு, திருப்புராணம் ஓதப்படுகின்றன. தேவாரங்கள் பண்களுடன் பக்தியாக ஓதப்படவேண்டும். திருப்புராணம் எனப்படுவது சேக்கிழார் பெருமானால் பாடப்பட்டதும் பன்னிரண்டாந் திருமுறையாக வகுக்கப்பட்டதுமான பெரிய



புராணமேயாகும். இச் சந்தர்ப்பத்தில் ஏனைய புராணங்கள் பாடுவது பொருத்தமற்றதாகும். காரணம் அவை திருமுறையில் இடம்பெறாதனவும் பிற்காலத்தனவுமாகும். பெரிய புராணம் பாடப்பட்ட பின்னரே ஏனைய புராணங்கள் பாடப்பட்டன . திருவிளையாடற் புராணம் , கந்தபுராணம் போன்றன திருமுறைகள் வகுக்கப்பட்ட பின்னரே பாடப்பட்டன. ஏன் கம்பராமாயணமும் பெரியபுராணம் சேக்கிழாரால் பாடப்பட்ட பின்னரே கம்பரால் பாடப்பட்டது என்பது வரலாறு கண்ட உண்மை.

தேவாரங்கள் திருஞான சம்பந்தர் , அப்பர், சுந்தரர், ஆகிய மூவராலும் பாடப்பட்டன என்பது அனைவரும் அறிந்ததே! பெரிய புராணம் தேவாரங்களுக்கு விளக்க நூலாகக் காணப்படுகிறது.சுந்தரமூர்த்தி நாயனார் அருளிச் செய்த திருத்தொண்டத் தொகையினை (தில்லைவாழ் அந்தணர்தம் அடியார்க்கும் அடியேன் ) முதல்நூலாகக் கொண்டு சேக்கிழாரால் பக்திச் சுவை நனி சொட்டச் சொட்ட பாடப்பட்டது திருத்தொண்டர் புராணம் எனும் பெரிய புராணம்.

சோழ நாட்டின் மன்னன் அநபாயன் என்பான் ஆட்சி செய்து கொண்டிருக்கும் வேளை அவனுக்கு முதலமைச்சராகவிருந்த சேக்கிழார் என்னும் அருண்மொழித் தேவர் அரசனிடம் சென்று அரசே! தாங்கள் பெரிதும் விரும்பிப் படித்து வரும் சீவகசிந்தாமணி என்பது சமணசமயத்தவரின் நூலாகும். அது இம்மைக்கு மட்டும் பயன்தருமன்றி மறுமைக்குப் பயன்தராது"என்றார். "அப்படியாமின் இம்மைக்கும் மறுமைக்கும் பயன்தரக்கூடிய நூல் உள்ளதா?" என்று அநபாயன் வினாவினான். "உள்ளது அதனைத் தொகுத்துத் தர அடியேனுக்கு அவகாசம் கொடுங்கள்" என்றார் சேக்கிழார். அங்ஙனமே அரசன் அமைச்சருக்குப் பொருளும் அவகாசமும் கொடுத்து அனுப்பினார். சேக்கிழார் தில்லைச் சிதம்பரம் சென்று சிந்தனையில் ஆழ்ந்திருக்கும் வேளை உலகெலாம் என்ற அசரீரி வாக்குக் கேட்டது. உடனே சேக்கிழார் மகிழ்ச்சியுற்று **உலகெலாம் உணர்ந்தோதற் கரியவன்** என்று தொடங்கி திருத்தொண்டர் மாக்கதையினை பாடி முடித்தார் என்று அறிகின்றோம்.

பெரிய புராணம் பாடி முடிந்ததை அரசன் கேள்வியுற்று தாம் தில்லை சென்று சேக்கிழாருக்குப் பெரும் பாராட்டுக்கள் செய்து ஏட்டுச் சுவடிகளை யானை மீது வைத்து ஆலயத்தினை வலம் வந்தான். மேலும் பெரிய புராணத்தினை ஏனைய திருமுறைகளுடன் சேர்த்து பன்னிரண்டாம் திருமுறையாகவும் ஐந்தாம் வேதமாகவும் பிரகடனப்படுத்தினான் எனும் வரலாற்றினை உமாபதிசிவாச்சாரியார் பாடியருளிய சேக்கிழார் புராணத்தில் காணலாம்.

கற்றதனால் ஆய பயனென்கொல் வாலறிவன்
நற்றாள் தொழாஅர் எனின்

தேவார ஆசிரியர்களான சம்பந்தர் , அப்பர், சுந்தரர், பாடிய பாடல்களையும் நிகழ்ச்சிகளையும் சேக்கிழார் குறிப்பிடும்போது அவர்கள் பாடிய பண்ணிலேயே பாடியுள்ளார். மேலும் அத்தேவாரங்களின் பண்களையும் குறிப்பிட்டுள்ளார். உதாரணமாக தோடுடைய செவியன் என்னும் மெய்மை மொழித் திருப்பதிகத்தை சிறிய பெருந்தகையார் பாடியதற்கு உரிய காரணத்தை விளக்குகின்றார்.

*எல்லையில்லா மணமுதல் மெய்யுடன் எடுத்த எழுதுமறை*
*மல்லல் நெடுந்தமிழால் இம்மானிலத்தோர் குரைசிறப்பப்*
*பல்லுயிரும் கழிசுரத் தம்பாடல் பரமர் பாற்*
*செல்லுமுறை பெறுவதற்கு திருச்செவியைச் சிறப்பித்துத்*

தோடுடைய செவியன் பாடினார் என்கின்றார்.

சுந்தர மூர்த்தி நாயனார் பித்தாப்பிறை சூடி என்னும் பாடலை இந்தளப்பண்ணில் பாடினார் என ஆசிரியர் கூறுகின்றார். பெரியபுராணத்தில் பல இடங்களில் பதிக முதற்குறிப்பு கூறப்பட்டுள்ளது. கூற்றாயினவாறு விலக்ககலீர் என்றும் மாதர்ப்பிறைக்கண்ணியானை என்றும் பதிக முதற்குறிப்பில் கூறியுள்ளார். மேலும் பத்தனாய்ப் பாடமாட்டேன் என்று முன்னெடுத்துப் பண்ணால் அத்தா உன் ஆடல் காண்பான் அடியனேன் வந்தவாறே என்கின்றார்.

மேலும் திருஞானசம்பந்தர் மூல இலக்கியமாக பாடிய இலக்கிய வகைகளை பட்டியல் போட்டுக்காட்டுகின்றார் சேக்கிழார்.

*''செந்தமிழ் மாலை விகற்பம் செய்யுட்களான் மொழிமாற்றும்*
*வந்த சொற் சீர்மாலை மாற்றும் வழிமொழி எல்லா மடக்கும்*
*சந்தவியறு மகம் ஏகபாதந் தமிழ் இருக்குக் குறள் சாத்தி*
*எந்தைக்கெழு கூற்றிருக்கை ஈரடி ஈரடி வைப்பு......................*

மூல இலக்கியமாகப் பாடியதையும் குறிப்பிடுகின்றார். திருநாவுக்கரசர் பாடியனவற்றை–

*நின்றதிருத்தாண்டகமும் நீடுதனித் தாண்டகமும்*
*மன்றுறைர்வார் வாழ் பதிகள்வழூத்து திருத்தாண்டகமும்*
*கொன்றை மடைச் சடையார் பால்குறைந்த திருநேரிசையும்*
*துன்றுதனி நேரிசையும்*

எனக் குறிப்பிடுகின்றார்.

இன்றும் திருசிரபுரம் மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம்பிள்ளை அவர்கள் பெரிய புராணப்பாடல்களை வியந்து பாராட்டி சேக்கிழார் பிள்ளைத் தமிழ் பாடியுள்ளார். ஒரு புராணத்திற்கு இன்னொரு புராணம் பாடுவதற்கு காரணமாக இருந்ததும் பெரிய புராணமே. இதுவே செந்தமிழ்க் காப்பியமாகும். ஆகவே சைவ அன்பர்களே! திருமுறைகளைப் பாடும் பொது திருப்புராணமாகப் பாடவேண்டியது பெரிய புராணமே என்பதை தக்க சான்றுகளுடனும் விளக்கக்குறிப்புகளுடனும் காட்டியுள்ளோம்.

*என்று மினபம் பெருகு மியல்பினால்*
*ஒன்று காதலித் துள்ளமு மோங்கிடத்*
*மன்றுளாரடி யாரவர் வான்புகழ்*
*நின்றதெங்கு நிலவி யுலகெலாம்*

உலகெலாம் எனத் தொடங்கி உலகெலாம் என நூலினைப் பூர்த்தி செய்தார் சேக்கிழார்.

## உங்கள் குறிப்புக்குரிய சிறப்புத் தினங்கள்

| | |
|---|---|
| 14–01–94 | தைப்பொங்கல் |
| 15–01–94 | சதுர்த்தி விரதம் |
| 17–01–94 | ஷஷ்டி விரதம் |
| 22–01–94 | கார்த்திகை விரதம் |
| 25–01–94 | பிரதோஷ விரதம் |
| 27–01–94 | பூரணை விரதம்,தைப்பூசம் |
| 06–02–94 | ஏகாதசி விரதம் |
| 08–02–94 | பிரதோஷ விரதம் |
| 10–02–94 | அமாவாசை விரதம் |
| 13–02–94 | மாசி மாதப் பிறப்பு |
| 14–02–94 | சதுர்த்தி விரதம் |
| 16–02–94 | ஷஷ்டி விரதம் |
| 18–02–94 | கார்த்திகை விரதம் |
| 22–02–94 | பீம ஏகாதசி விரதம் |
| 23–02–94 | பிரதோஷ விரதம் |
| 24–02–94 | நடேசரபிஷேகம் |
| 25–02–94 | பூரணை விரதம் |
| 08–03–94 | ஏகாதசி விரதம் |
| 09–03–94 | பிரதோஷ விரதம் |
| 10–03–94 | மஹா சிவராத்திரி விரதம் |
| 11–03–94 | அமாவாசை விரதம் |
| 14–03–94 | பங்குனிமாதப் பிறப்பு<br>காரடையா நோன்பு |
| 16–03–94 | சதுர்த்தி விரதம் |
| 17–03–94 | கார்த்திகை விரதம் |
| 18–03–94 | ஷஷ்டி விரதம் |
| 23–03–94 | ஏகாதசி விரதம் |
| 25–03–94 | பிரதோஷ விரதம் |
| 27–03–94 | பூரணை விரதம்,பங்குனி உத்தரம் |
| 06–04–94 | ஏகாதசி விரதம் |
| 08–04–94 | பிரதோஷ விரதம் |
| 10–04–94 | அமாவாசை விரதம் |
| 13–04–94 | கார்த்திகை விரதம்<br>சௌபாக்கிய கௌரிவிரதம். |
| 14–04–94 | பவ வருஷப் பிறப்பு<br>கார்த்திகை விரதம் |

பொறிவாயில் ஐந்தவித்தான் பொய்தீர் ஒழுக்க
நெறிநின்றார் நீடுவாழ் வார்

# எழுத்துலகில் இளைய நெஞ்சங்கள்

நாளைய சந்ததியினரின் நலன் கருதி இப்பகுதி உருவாக்கப்பட்டுள்ளது. இளைய சமுதாயம் ஆர்வமுடன் இப்பகுதியில் பங்குபற்ற வேண்டுமென்று விரும்புகின்றோம். இதற்குப் பெற்றோரும் உதவவேண்டும்.இளையவர்களை ஊக்குவிக்கும் பொருட்டு அவர்களின் சிறு கற்பனைப் படைப்புகளுக்கு சிறு வெகுமதியும் அளித்து வருகின்றோம். ஆதலால் இதில் பங்குபற்றும் மாணவர்கள் தங்களது முழு முகவரியையும் எமக்கு எழுதும்படி அன்போடு வேண்டுகின்றோம். எதிர்வரும் கலச இதழ்களில் பல புதுப்புது அம்சங்களை அறிமுகப்படுத்தவுள்ளோம்.

ஆசிரியர்.

# சி. பொ. மயில்வாகனன் ஞாபகார்த்த பரிசுத்திட்டம்

**வர்த்தக ஒலிபரப்பின் தமிழ்வேர் காலஞ் சென்ற சி.பொ. மயில்வாகனன் அவர்களது அன்புத் துணைவியார் திருமதி. செந்திமணி மயில்வாகனன் அவர்கள் எழுத்துலகில் இளைய நெஞ்சங்கள் பகுதியில் இவ்வருடம் இடம்பெறுகின்ற கட்டுரைகளுக்கு பரிசளித்து தமது அன்புக் கணவரின் சமயத் தொண்டினைத் தொடர்ந்து வளர்க்க முன் வந்துள்ளார்கள்.**

## நரியும் தந்திரமும்

ஒரு நாள் ஒரு நரி பசியால் அலைந்தது. வழியில் ஒரு இறந்த யானையைக் கண்டது. கிட்டச் சென்று அதனை உண்ணப் பார்த்தது. ஆனால் அதனால் அதன் தோலை உரிக்க முடியவில்லை. அங்குமிங்கும் பார்த்தது. ஒரு புலி அவ்வழியே வந்தது. உடனே நரி புலியைப் பார்த்து புலியாரே, சிங்கராசா என்று சொல்லத் தொடங்கியதும் புலி ஓடத்தொடங்கியது. உடனே புலியாரே ஓட வேண்டாம் என நரி கூறியது. சிங்கராசா இதனைக் கொன்றுவிட்டுப் போய்விட்டார். அவர் திரும்பிவர அதிக நேரம் எடுக்கும். இதனை நீர் சாப்பிடலாம் என்றது. புலிக்கு ஒரே சந்தோஷம். உடனே தாமதிக்கமாமல் சென்று யானையின் தோலை வேகமாக உரித்தது. உரித்து முடிக்கும் வரை பார்த்திருந்த நரி முடிக்கும் போது புலியாரே புலியாரே அதோ சிங்கராசா வருகின்றார் என்று கூறியது. அதனைக் கேட்ட புலி திரும்பிக்கூடப் பார்க்காமல் ஓடியது. இதனைப் பார்த்த நரி, தனக்குள்ளே சிரித்துக்கொண்டே போய் யானையின் இறைச்சியைச் சாப்பிட்டது.

தனுஷன் தர்மசேனா
வயது – 11
நால்வர் தமிழ்க் கலை நிலையம்

# நான் பார்த்த தேர்த்திருவிழா

ஆவணி மாதம் 15 ஆம் திகதி அதிகாலை ஐந்து மணிக்கு நான் என்னுடைய அம்மாவின் ஆரவாரத்தினால் எழும்பினேன். நித்திரைக்கலக்கத்தில் பக்கத்தில் இருந்த பட்டுப்பாவாடைகளை நான் விசித்திரமாகப் பார்த்தேன். அப்போது தான் எனக்கு நினைவுக்கு வந்தது அன்று தேர்த்திருவிழா என. குளியலறையை நோக்கி விரைந்தேன. சுமார் ஏழு மணியாகும் போது மோட்டார் வண்டியில் நானும் எனது தங்கையும் அண்ணனும் ஸ்ரீமுருகன் கோவிலுக்குப் போனோம். கோவில் வாசலில் ஏறும்போதே, அங்கிருந்த செருப்பு சப்பாத்து வெள்ளம் என்னை திணறடிக்கச் செய்தது. மூலஸ்தானத்தில் இருக்கும் சுவாமியை எந்த விதத்திலும் பார்க்க முடியாத அளவிற்கு பக்தர்கள் குழுமி நின்றனர். கடைசி வசந்த மண்டபூசையாவது பார்க்கும் நோக்கத்துடன் முன்பே போய்க் காத்துக்கொண்டிருந்தோம். திரைச்சீலை விலகியதும் எம்பெருமான் வள்ளி தெய்வானையோடு பற்பல நகைகள் பூட்டி பல வண்ண மலர் மாலை அறிந்து இருந்த கோலம் காண்போர் கண்ணை பறிக்கும் வண்ணம் இருந்தது. மந்திரங்கள் ஓதி பஞ்ச தீபங்கள் காட்டி குருக்கள் சுவாமியை உபசரித்தார். பஞ்ச புராணங்கள் பாடிய பெரியவர் மிகவும் பக்திப் பரவசத்துடன் பாடினார். சுவாமி தேர் ஏறியவுடன் தேரின் பின்னே நாங்களும் சுற்றி வந்தோம்.எந்தத் திக்கில் நோக்கினாலும் எல்லையற்ற கடலாக மனித வெள்ளம் இருந்தது. கற்பூர சட்டி தூக்குபவர்களும் பஜனை செய்பவர்களும் வடம் இழுப்பவர்களுமாக பக்தர்கள் சுவாமிக்குப் பணிவிடை செய்தனர். ஆங்காங்கே தமிழ்ச்சங்கங்கள் பக்தர்களுக்கு குளிர்பான வகைகளும் திண்பண்டங்களும் கொடுத்து தொண்டு செய்தார்கள். இப்படியாக பலர் மனதைக் கவர்ந்தபடி சுவாமி அழகிய தேரில் அமர்ந்து வலம் வந்தார். தேர்த்திருவிழா வழிபாடு மட்டுமன்றி ஒரு இன்பமான நிகழ்ச்சியாகவும் இருந்தது.

வதனா
வயது —15
திருவள்ளுவர் தமிழ்ப் பள்ளி

# நான் எப்படி பாடசாலை விடுமுறையைக் கழித்தேன்.

பிரான்சுக்கு நாங்கள் காரிலும் பெரியிலும் போனோம். அங்கு ஒரு கிழமை நின்றோம். ஈராடிஸ்னிக்கும் , ஈபில் டவருக்கும் பொனோம். நான் ஈபில் டவரின் மேல் மாடிக்குப் போனேன். அதில் நின்று பார்க்கும் பொழுது கீழே எல்லாம் சிறிதாக தெரிந்தன. ஈரோடிஸ்னியில் நான் பலவிதமான ஓட்டங்களில் போயிருந்தேன். அவை மிகவும் பயங்கரமானவை. நான் அங்கு இரவு பத்துமணி மட்டும் நின்றேன்.அப்பொழுது நான் மின்சார அணிவகுப்பைப் பார்த்தேன்.பார்ப்பதற்கு மிகவும் அழகாக இருந்தன. பின்பு சுவிஸ்லாந்துக்குப் போய் மூன்று நாட்கள் நின்று இடங்கள் பார்த்தேன். இந்த நாடு ஒரு மலைப்பிரதேசம். அங்கு நான் டைட்லிஸ் மலைக்கு காரில் போனோம். நான் ஞாபகத்திற்காக சில பொருட்கள் வாங்கி வந்தேன்.

ஜனகன் பரமேஸ்வரன்
வயது 11
நால்வர் தமிழ்க் கலைநிலையம்.

# ஆறுமுகன்

சூரன் தேவர்களைத் துன்புறுத்தினான். அவர்கள் சிவனிடம் முறையிட்டார்கள். சிவனுக்கு கோபம் வந்தது. தன் மூன்றாவது கண்ணைத் திறந்தார். அதிலிருந்து ஆறு தீப்பொறிகள் சரவணப்பொய்கையில் வந்து வீழுந்தன. அவைகள் ஆறு குழந்தைகளாக தோன்றின. பார்வதி அம்மையார் அவர்களைக் கட்டி அணைத்தார். இவ்வாறு ஒன்று சேர்த்த குழந்தை தான் ஆறுமுகன்.

சுபாங்கி பாலசுப்பிரமணியம்.
வயது —10
நியூமோல்டன்

# என் அம்மம்மா

எனது அம்மம்மாவின் பெயர் குணவதி. அவர் இலங்கையில் யாழ்ப்பாணம் என்ற இடத்தில் பிறந்தர். அவர் 1937ஆம் ஆண்டு பிறந்தார். அவருக்கு மூன்று சகோதரிகளும் நான்கு சகோதரர்களும் உண்டு.அவர் இலங்கையில் 54 ஆண்டு காலம் வசித்து தற்போது கனடாவில் இருக்கின்றார். அவர் தையல் தற்பதின் மூலம் சம்பாதிப்பதில் விருப்பம் உள்ளவர். அவருக்கு நான்கு பெண்பிள்ளைகளும் ஒரு ஆண்பிள்ளையும் இருக்கின்றார்கள். அவர் லண்டனுக்கு 1992ஆம் ஆண்டு மார்கழி மாதம் வந்து 1993ஆம் அண்டு வைகாசி மாதம் பதினைந்தாம் திகதி கனடா சென்றார். அவர் கடவுள் பக்தி உடையவர்.

தக்ஷாயி – தனபதி
வயது 10
நால்வர் தமிழ்க் கலைநிலையம்.

# அருந்ததியும் வசிஸ்டரும்

முனிவர் வசிஸ்டரும் அருந்ததியும் கணவன் மனைவி ஆவர். வசிஸ்ட முனிவர் ஓர் பிரபல முனிவராவார். அருந்ததி அம்மையார் ஓர் நல்ல மனைவியாக அவரது கணவரை முழு மனதுடன் நேசித்துப் பணிபுரிந்து வந்தார். எப்பொழுதாவது அவ்வம்மையார் கோபத்துடன் முறண்டுத்தனமாக வசிஸ்டருடன் நடந்தது கிடையாது. ஒரு சமயம் பல முனிவர்களுடன் வசிஸ்டர் அரிசி பெறுவதற்காக இமைய மலை சென்றிருந்தார் . அச் சமயம் அங்கே உணவுப் பஞ்சம் நிலவியது.அருந்தத் அம்மையாரும் காட்டுப் பிரதேசத்தில் வசித்தபடியால் பசிப்பிணியால் பாதிக்கப்பட்டு 12 வருட காலமாக வாழ்ந்து வந்தார். அவர் தமது சீவனை சிவபெருமானுக்கு அற்பணித்து அவரைத் தொழுது வந்தார். சிவபெருமான் அவ் அம்மையாரைச் சோதிக்கும் பொருட்டு ஓர் பிராமணவடிவத்துடன் பூவுலகில் தோன்றி அருந்ததி அம்மையாரிடம் சென்று பசியெனக்கூறி உணவு தரும்படி கேட்டார். அவ்வம்மையாரிடம் குறைவாகத் தானியங்கள் இருந்த போதும் முழுத்தானியங்களையும் சிவபெருமானுக்கு அர்ப்பணித்தார்.அத் தானியங்களைப் பொரித்துக் கொடுக்கும்படி சிவபெருமான் கேட்டதும் அம்மையார் அப்படியே செய்தார். அப்படிச் செய்யும்போது அம்மையார் தருமத்தைப் பற்றி ஆர்வத்துடன் போதித்தார். அப்படியே 12 வருடங்கள் கடந்தன.சிவனோ மிகத் திருப்தி அடைந்து அருந்ததியை ஓர் வான வெள்ளியாக அமைத்தார்.
இன்றும் புதுத் தம்பதிகளுக்கு அவர்கள் விவாகம் செய்து முடித்தவுடன் ஒன்றாக நல் வாழ்க்கை நடத்துவதற்கு வானத்தில் தோன்றும் அருந்ததியைக் கண் கொண்டு பார்ப்பது வழக்கமாகிவிட்டது.

கல்யாணி நந்தன்
வயது 14



By Baivani Murukathasan
வயது: 9
நால்வர் தமிழ்க் கலைநிலையம்

## DIVINE NECTAR
## by
## Swami Sivananda

1. When you love God, you love everything
2. Saturate your mind with thoughts devine
3. Ignorance is the cause of bondage
4. A wiseman attains perfection
5. Peace is the ornament of a Saint
6. The way to God is through the heart
7. Religion is nothing but love for God
8. The essence of religion is Devine experience.
9. Nothing can save you except Dharma.
10. Goodness is the way to true happiness
11. Good conduct is the course of happiness
12. Desire is the great impurity of the mind
13. Let prayer be basis of your life
14. Truth,love, beauty and goodness are one
15. If you wish to be strong, be pure
16. Repeat the Lord's name with every breath
17. A true devotee hates none
18. Self-control is the very key to beatitude
19. Trust your intution which will never fail you
20. Power of charecter is the power of the will

## *THE REAL GOOD*

( John Boyle O'Reclly)

What is the real good?
I asked in musing mood,
Order said the law court
Knowledge said the school
Truth said the wise man
Pleasure said the fool
Love said the maiden
Beauty said the page
Freedom said the dreamer
Home said the sage
Fame said the soldier
Equity said the seer
Spake my heart fully said
The answer is not here
Then within my bosom
Softly this I hear
Each heart holds the secret
Kindness is the world


PURCHASING, SELLING OR LETTING
WHY NOT TRY?

EMPIRE PROPERTY SERVICES LTD
TEL : 081 527 1104

72, FOREST ROAD, WALTHAMSTOW, LONDON E17 6HF
(CLOSE TO BLACKHORSE UNDERGROUND)
OPEN 7 DAYS A WEEK. INCL. LATE EVENINGS

NORWICH UNION INSURANCE

TEL : 081 527 1104
FAX: 081 503 2085

MORTGAGES, LIFE INSURANCE
INVESTMENTS & PENSIONS

WE ARE AN APPOINTED
REPRESENTATIVE OF
NORWICH UNION
LIFE INSURANCE &
UNIT TRUST MARKETING
GROUP-MEMBER OF LAUTRO

SUGERY PURCHASE &
PRIVATE MEDICAL SCHEMES

CALL US ON
THE ABOVE
NUMBER

VALUATION SURVEYS, STRUCTRAL REPORTS, HOUSE PLANTS AND REFURBISHMENT WORKS
FOR COUNCIL & BUILDING SOCIETY REQUIRMENTS




சைவ முன்னேற்றச் சங்க பதிப்பகத்தில் அச்சமைப்பும் வடிவமைப்பும் செய்யப்பட்டு, ஐரோப்பாவில் தரமான செல்வம் அச்சகத்தினரால் அச்சிடப்பட்டு சைவ முன்னேற்ற சங்கத்தால் 14.1.1994 அன்று வெளியிடப்பட்டது.